கூட்டில்
விடாமுயற்சி திருவினையாக்கும்

# முயற்சி

KOOTIL MUYARCHEE தமிழ் மாத இதழ்

Web : kootilmuyarchee.com
YouTube kootilmuyarchee

| திருப்பூர் | மலர் - 5 | இதழ் -11 | அக்டோபர் 2024 | பக்கம் -40 | விலை ரூ.20/- |
|---|---|---|---|---|---|
| Tirupur | Volume- 5 | Issue -11 | October 2024 | Page - 40 | Price: Rs.20 /- |



தீபாவளி சிறப்பிதழ்



## அனைத்து விழாக்களிலும் திமுக அரசு ஆட்சியில் இருக்கிறது

முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

## சாலை வசதி கேட்டு மலைவாழ் மக்கள் போராடும் அவலம்



## இந்திய அரசியலில் ஆளுமை மிக்க தலைவர் சீதாராம் யெச்சூரி

## திருப்பதியில் லட்டு 300 ஆண்டுகள் வரலாறு பின்னணி

## குப்பையில் கூடி கொள்ளை அடிக்கும் அவலம்..! எங்கே...? எப்படி...?

# கூட்டில் முயற்சி புலனாய்வு மாத இதழ்

## 6 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது



தமிழக முதல்வர்,
அரசியல் கட்சி தலைவர்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்,
மாநகர காவல்துறை நண்பர்கள்,
அரசுத்துறை அதிகாரிகள்,
வாசகர்கள் மற்றும் பத்திரிக்கைத்துறை
நண்பர்கள்

ஆகிய உங்களால் 6 ஆம் ஆண்டில்
அடியெடுத்து வைப்பதில் கூட்டில் முயற்சி
மாத இதழ் பெருமை கொள்கிறது.

இவை அனைத்தும் உங்களால் சாத்தியமாயிற்று.

தீப ஒளி திருநாளில் அனைவருடைய
வாழ்விலும் இருள் நீங்கி தீபாவளி திருநாள்
சிறப்பாக கொண்டாடுவதில் மகிழ்ச்சி
அடைகிறோம்

என்றும் நன்றியுடன்,

**L. சூரியகுமார்,** ஆசிரியர், வெளியீட்டாளர்
**99941 90815, 94984 33815**

கூட்டில் முயற்சி
விடாமுயற்சி திருவினையாக்கும்
தமிழ் மாத இதழ்

Web : kootilmuyarchee.com
YouTube kootilmuyarchee
கண்டு களியுங்கள்

கூட்டில் முயற்சி
புலனாய்வு மாத இதழ்

# ஆசிரியர் கடிதம்

ஆசிரியர் வெளியீட்டாளர்,
நிறுவனர்

**L.சூரியகுமார்**

99941 90815

செய்தி ஆசிரியர்,
**பரமராஜ்** பழனி
D.**மயில் மணி**
D.**சுரேஷ்** பழனி

நிர்வாக ஆசிரியர்கள்,
T.S.**முருகன், காளீஸ்வரன்** (சென்னை)

துணை ஆசிரியர்கள்,

C. **போஸ்** T.**சபரிராஜ்,**
R.**கோபாலகிருஷ்ணன்,**
v.**செல்வராஜ்,** K. **பழனிசாமி**
**சுப்புலட்சுமி**

தலைமை நிருபர்கள்

S.**மோகன்,**
R.**ஜெய்சங்கர்**
A.**சரவணன்,**

**ரவீந்திரன்** (சென்னை
சிறப்பு நிருபர்)

அனைவரின் வாழ்வில்
இரு நீங்கி ஒளி பெருகி
ஒளிமயமான உங்கள்
வாழ்வில் எதிர்காலம் பெருக
மத்தாப்பு பட்டாசு வெடித்து
புத்தாடை அணிந்து தீப ஒளி
திருநாளில் அனைவரும்
கொண்டாடுவோம் அட்வான்ஸ்
தீபாவளி வாழ்த்துக்கள்
கூட்டில் முயற்சி மாத இதழ்
ஆறாம் ஆண்டு அடியெடுத்து
வைக்கும் இந்நாளில் பெருமை
கொள்கிறோம் வாசகர்களாகிய
உங்களால் சாத்தியமாயிற்று.



சென்னை எழும்பூர் பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலையில் RNI புதுடெல்லியில் பதிவு பெற்ற கூட்டில் முயற்சி மாதஇதழில் பத்திரிக்கை சட்டதிட்டத்திற்கு உட்பட்டு செய்திகள் உண்மைத் தன்மையுடன் வந்து கொண்டிருக்கிறது.

This publication Kootil Muyarchi has been sworned before the Hon'ble Metropolitan Magistrate Egmore chennai. All the news publishing in this magazine collected from credential, valuable sources that are evidentially true. Subject to the Madras High Court Jurisdiction, The Press Registration Act, RNI New Delhi.

# தமிழக அரசு வெளியிட்ட 14 கொள்கைகளுக்கு அமெரிக்க நிறுவனங்கள் பாராட்டு

தொழில் வளர்ச்சிக்காக கடந்த 3 ஆண்டுகளில் தமிழக அரசு வெளியிட்ட 14 கொள்கைகள் குறித்து, அமெரிக்க பயணத்தின்போது அந்நாட்டு நிறுவனங்களிடம் விளக்கினேன். நமது கொள்கை குறிப்புகளை அவர்கள் பாராட்டினர் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் விதமாக கடந்த ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 12-ம் தேதிவரை அமெரிக்காவில் முதல்வர் ஸ்டாலின் அரசுமுறை பயணம் மேற்கொண்டார். இந்த நிலையில், தனது பயண அனுபவத்தை தொண்டர்களுடன் பகிரும் வகையில் கடித தொகுப்பாக வெளியிட்டுள்ளார். 'அமெரிக்க பயணச் சிறகுகள் (1)' என்ற தலைப்பிலான முதல் பகுதியில் முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளதாவது:

ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற பொருளாதார இலக்கைஅடைய தேவைப்படும் உழைப்பை உணர்ந்தே, இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே அமெரிக்காவுக்குகடந்தஆக.27-ம்தேதிபயணித்தேன். தொடர்ந்து 16 மணி நேரம்ஒரே விமானத்தில் நீண்ட

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

பயணம்என்பது சற்றே களைப்பை ஏற்படுத்தினாலும், சான்பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் தமிழர்களின் முகங்களை பார்த்ததும் உற்சாகம் கொண்டேன். வரவேற்புக்குபிறகு,அங்குள்ளபெருமை கொண்ட ஓட்டல் ஃபேர்மாண்ட்டில் தங்கினேன். இரவு ஓய்வுக்குபிறகு,மறுநாள்காலையில்முதலீட்டாளர்கள் சந்திப்புக்கு ஆயத்தமானேன்.

உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான நோக்கியா, அதைத்தொடர்ந்து, பே-பால், ஈல்டு இன்ஜினீயரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்ஃபிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனம், அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனத்தினர் என்னை சந்தித்தனர். இதன்மூலம் ரூ.1,800 கோடி முதலீட்டில் 4,100 பேருக்கு வேலை அளிக்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது. தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டிய அமெரிக்க நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் நம்தமிழகத்தை சேர்ந்தவர்கள் இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. இந்த சந்திப்பின்போது, கடந்த3 ஆண்டுகளில்



தொழில் வளர்ச்சிக்காக வெளியிடப்பட்டுள்ள 14 கொள்கைகள் அடங்கிய வெளியீடுகளை அமெரிக்க நிறுவனங்களிடம் வழங்கி, அவற்றை விளக்கினேன். நமது கொள்கை குறிப்புகளை அவர்கள் பாராட்டினர்.

பகலில், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட நிலையில், மாலையில் முதலீட்டாளர்கள் உடனான மாநாடு நடைபெற்றது. இதில் அமெரிக்காவை சேர்ந்த 100–க்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்றன. ''தமிழகத்தில் 39,000 தொழிற்சாலைகளும், அதில் பணியாற்றக்கூடிய 26 லட்சம் பணியாளர்களும் இருப்பதால், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு அதிகமாக உள்ளது. எனவே, முதலீடு செய்ய முன்வர வேண்டும். தேவைப்படும் கட்டமைப்புகளை தமிழக அரசு நிறைவேற்றி தரும்''என்று தெரிவித்தேன்.

சென்னைபோல சான் பிரான்சிஸ்கோவில், ஐ.டி. நிறுவனங்கள் நிறைந்த பகுதியை 'சிலிகான் வேலி'என்கின்றனர். இங்குதான் ஆப்பிள், கூகுள், மெட்டா என உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளன. அங்கு, ஆப்பிள்நிறுவன உயர் அதிகாரிகளைசந்தித்தபோது, தமிழகத்தில் தங்கள் உற்பத்தி நிறுவனங்களை விரிவாக்கம் செய்வது குறித்து கருத்து பரிமாறப்பட்டது.

தொடர்ந்து கூகுள் நிறுவனத்துக்கு சென்றபோது, அங்கு பல பிரிவுகளிலும் தமிழர்கள் பலர் நல்ல பொறுப்பில் இருப்பது தெரிந்தது. கூகுள் உயர் அலுவலர்கள் உடனான சந்திப்பில், ''தமிழகத்தின் 'நான் முதல்வன்' திட்டத்தில் இடம்பெறும் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு துறையில் கூகுள் நிறுவனம் பயிற்சி அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். உடனடியாக ஒப்புக்கொண்ட கூகுள் நிறுவனத்தினர், தமிழகத்தில் 20 லட்சம் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு துறையில் பயிற்சி அளிக்கும் திட்டத்துக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டனர்.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டிநிறுவனத்துடன் இணைந்து கூகுள்நிறுவனத்தின் இந்த பயிற்சி நடைமுறைக்கு வருகிறது. கூகுள்நிறுவனம் தற்போது ஃபோன்,ட்ரோன் போன்ற தயாரிப்புகளிலும் முனைப்பாக இருப்பதால்,அதுதொடர்பான பேச்சுவார்த்தைகளும் சுமுகமாக அமைந்தன.

அடுத்தாக, மைக்ரோசாப்ட் நிறுவனம் ஏற்கெனவே ரூ.2,570 கோடிக்கான முதலீடுகளுக்கு ஒப்பந்தம் போட்டிருப்பதால், அதை விரைவாக நிறைவேற்றுவது குறித்து உரையாடினோம். கூடுதல்முதலீடுகள் குறித்தும் பரிசீலிப்பதாகவும் உறுதி அளித்தனர். சிலிகான்வேலியில் உள்ள கோவை கஃபேயில் மதிய உணவு. பாரம்பரிய முறைப்படி வாழை இலையில், நம் ஊர் சாப்பாட்டை பரிமாறினர். பசிக்கேற்ற ருசியுடன் உணவு சிறப்பாக இருந்தது.

அன்று மாலை, சான் பிரான்சிஸ்கோவில் அமெரிக்க வாழ் தமிழர்கள், இந்தியாவின் பிற மாநிலத்தவர்களை சந்தித்தேன். அவர்கள் அளித்த வரவேற்பை தமிழக மக்கள் அனைவருக்குமான வரவேற்பாகவே கருதுகிறேன். மறுநாள் செப்.1–ம் தேதி ஓமியம் நிறுவனத்துடன் ரூ.400 கோடியில் 500 பேருக்கு வேலை அளிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டேன். தொடர்ந்து, சான்பிரான்சிஸ்கோவில் கடலுக்கும், மலைக்கும் இடையிலான சாலையில் ஆள் இல்லாத காரில் பயணித்தது இனிமையான சாகசம்போல அமைந்தது. இதையடுத்து, சிகாகோ நோக்கி விமானத்தில் பறந்தேன். ஐந்தரை மணி நேர பயணம்.

சான் பிரான்சிஸ்கோ போலவே சிகாகோ விமான நிலையத்திலும் அமெரிக்க வாழ் தமிழர்கள் திரண்டுஅளித்த வரவேற்பு, அடுத்தடுத்த சந்திப்புகளுக்கும், முதலீடுகளை ஈர்ப்பதற்கும் பெரும் நம்பிக்கையை அளிப்பதாக இருந்தது. இவ்வாறு அதில் முதல்வர் தெரிவித்துள்ளார்.


செய்தியாளர்கள்,

R.**நடராஜன்** (சேலம்)

D.**மணிகண்டன்** (திண்டுக்கல்)

**பிச்சைமணி** (தேனி)

A. **அருணாசலம்** (சூலூர்)

R.**செந்தில்** (நாமக்கல்)

**மகேந்திரன்** (திருப்பூர்)

M.**ராமகிருஷ்ணன்** (சேலம்)

G.**கோபால் ராஜ்** (விருதுநகர்)

**கருப்பையா** (நிலக்கோட்டை)

**குரு** (திருச்சி) **கார்த்தக்ராவ்** (தஞ்சாவூர்)

B.**கிருஷ்ணகுமார்** (ஈரோடு)

சட்ட ஆலோசகர்கள்,

K.**சகாதேவன்,** M.com,LLB.

S.**சரவணகுமார்,** Bsc.L,L,B.

# டோல்கேட் கட்டண கொள்ளை

இந்தியாவில் பல டோல் கேட்டிலும் தமிழகத்தில் இருபத்தி நான்கு சுங்கச் சாவடிகள் உட்பட இன்று முதல் 01.09.2024 முதல் சுங்க கட்டணம் 07முதல் 10 சதம் வரை உயர்த்தி விட்டார்கள் பயனாளர்கள் அனைவருக்கும் மிக்க அதிர்ச்சி வேறு என்ன செய்ய இயலும்.

இந்திய அரசாங்கம் தன்னுடைய நிதியிலிருந்து புதிதாக சாலைகளை உருவாக்க இயலாததால் தனியாரே புதிய தேசிய நெடுஞ் சாலைகளை போடவும் அப்படி போட்டதற்கான தொகையும் அதை பராமரிக்கவும் புதிய விதிகளை “National High ways Fees ( Determination of Rates and collection ) Rulesä மத்திய அரசு 2008 ல் கொண்டு வந்தது.

அதன்படி “ BOAT “ Build operate Transfer என்ற அதாவது ஒரு தனியார் நிறுவனம் ஒரு நெடுஞ்சாலையை உருவாக்கி , அதற்கு ஆன செலவினை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வசூல் செய்து விட்டு பின்னர் அரசிடம் சாலை ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஆனால் நடப்பது என்ன? சாலையை ஒரு தனியார் நிறுவனம் உருவாக்குகிறது என்றால் அதற்கான செலவு , அந்த தொகை எவ்வளவு வருடத்திற்குள் அவர்களுக்கு” Realisation” ஆகும், அந்த தொகை கிடைத்த பின் அந்த சாலை அரசிடம் எப்போது ஒப்படைக்கப் படும் என்பது யாருக்கும் தெரியாது எந்த வித வெளிப் படைத்தன்மை எதுவும் இல்லை.

பல டோல்கள் அதற்கான காலம் முடிந்த பின்னரும் தொடர்ந்து சுங்கத் தொகை வசூலிப்பதாக சொல்லப்படுகிறது.



பதினைந்து நிமிடத்திற்கும் **மேல் தேங்கினால் டோல்** வசூல் செய்யக்கூடாது **என்று விதி இருப்பதாக** கூறப்படுகிறது, ஆனால் சில **நேரங்களில் நாற்பது நிமிடம்** கூட வாகனங்கள் காக்க **வேண்டிய நிலை உள்ளது,** இதனால் நெடுஞ்சாலைகள் **போடப்பட்டதற்கான காரணம்** நிறைவேறாமலே உள்ளது.

---

தமிழகத்தில் மொத்தமாக 42 டோல் பிளாசாக்கள் உள்ளன, உதாரணத்திற்கு சென்னையில் இருந்து மதுரைக்கு ஒன்பது டோல் பிளாசாக்கள் உள்ளன.

அதற்கான தொகை சாதாரணமாக நான்கு சக்கர

கார்களுக்கு ( Jeep, van & Car) ஒரு வழி பயண்பாட்டிற்கு ரூ.900–ம் ஆக இருந்தது தற்போது ரூ.990/– க்கு மேல் உயர்ந்து விட்டது.

அரசு சாலையில் செல்ல வாகணங்கள் வாங்கும் போதே "Life Tax" கணிசமாக வசூலித்து விடுகிறது.

அதற்கு பின்னரும் நெடுஞ் சாலையில் செல்ல அதை உபயோகப்படுத்துவதற்கான

கட்டணங்கள் "Tool Charges" ஆக தனியாக வசூலிக்கப்படுகிறது.

இது மிக,மிக அதிகமாகவே வசூல் செய்யப்படுகிறது மற்றும் இதை அனைவரும் டோல் கொள்ளை என்றே அழைக்கிறார்கள்.

வசூலிக்கும் அளவுக்கு பெரும்பாலஆன நெடுஞ்சாலைகளை முறையாகவும் சரியாகவும் பராமரிப்பதும் இல்லை,

ஆனால் சுங்க கட்டணத்தை மட்டும் ஒவ்வொரு வருடமும் உயர்த்தி வசூல் செய்கிறது இதை சரியாக அரசும் மானிட்டர் செய்வதும் இல்லை.

அரசு என்ன செய்ய வேண்டும்:

அரசு இதில் வெளிப்படைத் தன்மையை கடைபிடிக்க வேண்டும், அதாவது சாலை எந்த நிறுவனத்தால் போடப்பட்டது, அதற்கான செலவு எவ்வளவு, எவ்வளவு காலங்களுக்கு சாலை போட்ட நிறுவனம் சுங்க கட்டணம் வசூல் செய்யும், எப்போது சாலை அரசிடம் ஒப்படைக்கப்படும் அதற்கான அரசு உத்தரவுகள் ஆகியவைகள் ஒவ்வொரு டோல் பிளாசாவின் முன் தகவல் பலகை வைக்கப்பட வேண்டும்.

மேலும் டோல் பிளாசின் அருகில் இருக்கும் ஊர்களில் பதிவு செய்யப்பட்ட அந்தந்த டோல் பிளாசாவால் அங்கிருக்கும் வாகனங்களுக்கு டோல் வசூல் செய்யக்கூடாது என்பது விதி ஆனால் பெரும்பாலான டோல் பிளாசாக்கள் இந்த விதியை மீறியே செயல் படுகிறது.

டோல் பிளாசாவில் வாகனங்கள்

பதினைந்து நிமிடத்திற்கும் மேல் தேங்கினால் டோல் வசூல் செய்யக்கூடாது என்று விதி இருப்பதாக கூறப்படுகிறது, ஆனால் சில நேரங்களில் நாற்பது நிமிடம் கூட வாகனங்கள் காக்க வேண்டிய நிலை உள்ளது, இதனால் நெடுஞ் சாலைகள் போடப்பட்டதற்கான காரணம் நிறைவேறாமலே உள்ளது.

மக்கள் தான் பாவம், வருடத்திற்கு ஒரு முறை கட்டணத்தைக் கூட்டினாலும்,அல்லது மாதத்திற்கு ஒரு முறை

கூட்டினாலும் என்ன செய்து

விடப் போகிறார்கள் புலம்புவதை தவிர.என்ன செய்ய முடியும்

## திருப்பதி லட்டு

# தயாரிப்பில் இவ்வளவு சுவாரஸ்ய தகவல்கள் இருக்கா?

## 300 ஆண்டு வரலாறும்.. பின்னணியும்!

**திருப்பதியில் வழங்கப்படும் லட்டுகள் குறித்து சுவாரஸ்யமான வரலாற்றுத் தகவல்கள் இங்கு பார்ப்போம்..**



திருப்பதி என்றாலே எல்லோருக்கும் நினைவுக்கு வருவது, ஸ்ரீஏழுமலையான் கோயிலில் தயாரித்து விற்கப்படும் லட்டுகள்தான். உலகம் முழுவதும் பிரபலமடைந்த இந்த லட்டு, தற்போது ஆந்திர அரசியலில் பூதாகரமாக வெடித்துள்ளது.

திருப்பதியில் பிரசாதமாக வழங்கப்படும் லட்டில், நெய்க்குப் பதிலாக விலங்குகளின் கொழுப்பை ஜெகன் மோகனின் அரசு கலந்ததாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டியிருந்தார். தவிர, அதற்கான ஆதாரங்களும் தற்போது வெளியிடப்பட்டிருக்கும் நிலையில், இவ்விவகாரம் ஆந்திர அரசியலில் புயலைக் கிளப்பியுள்ளது. தவிர, பக்தர்களிடமும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி மறுப்பு தெரிவித்திருப்பதுடன், நீதிமன்றக் கண்காணிப்பில் விசாரணை நடத்தக் கோரி ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி, இன்று ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது. அதுபோல், ஆளும் தெலுங்கு தேச கூட்டணியிலான



சந்திரபாபு நாயுடு அரசும் இவ்விவகாரத்தில் தவறு செய்தோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

.இந்த நிலையில், திருப்பதியில் வழங்கப்படும் லட்டுகள் குறித்து சுவாரஸ்யமான வரலாற்றுத் தகவல்கள் இங்கு பார்ப்போம்..

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் விநியோகிக்கப்படும் புனித பிரசாதமாக கருதப்படும் லட்டுகளுக்கான தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, திருப்பதி கோயில் லட்டுகள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலும் அதிக வரவேற்பு பெற்றுள்ளது. இதையடுத்தே, கள்ளச்சந்தையில் அதிக லட்டுகள் விற்கப்படுவதைத் தடுக்கும் வகையில், சமீபத்தில் திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் புதிய உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

முன்பெல்லாம் திருப்பதியில் சாமி தரிசனம் செய்தால் மட்டுமே லட்டு வழங்கப்படும். அதன் பிறகு சாமி தரிசனம் செய்யவில்லை என்றாலும் லட்டு பிரசாதமாக வாங்கிக் கொள்ளலாம். இதை பயன்படுத்தி அதிக லட்டுக்களை பெற்றுச் சென்று, கள்ளச்சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதாக புகார்கள் எழுந்தது. இவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில், சாமி தரிசனம் செய்யாதவர்கள் லட்டு வாங்க வேண்டுமானால், அவர்களுக்கு ஆதார் அட்டை கட்டாயம் என்ற முறை கொண்டு வரப்பட்டுள்ளது.

பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டு வரும் இந்த லட்டு, திருப்பதி ஏழுமலையான் கோயிலில் அமைந்திருக்கும் 'பொடு' எனும் மடப்பள்ளியில் மிகவும் பாதுகாப்பான முறையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. திருப்பதி லட்டு தயாரிப்பு, கடந்த 1715ஆம் ஆண்டு முதல் தொடங்கியிருக்கிறது. அதன்படி பார்க்கப்போனால், இதன் காலம் 300 ஆண்டுகளுக்கு முந்தையதாக உள்ளது. இந்த லட்டு, கடந்த 2014ஆம் ஆண்டு 'ஜிஐ' எனப்படும் புவிசார் குறியீடு பெற்றுள்ளது.

எனவே, இந்த தயாரிப்பு முறையைப் பயன்படுத்தி வேறு யாரும் லட்டு தயாரித்து, இந்தப் பெயரில் விற்பனை செய்ய முடியாது. பொதுவாக, இந்த லட்டுகளைத் தயாரிக்கும் சமையல்காரர்கள் தங்கள் தலையை மொட்டையடித்தும் சுத்தமான ஆடையை அணிந்தும் பாரம்பரிய முறையில் ஈடுபடுகின்றனர்.

அவர்கள் தயாரிக்கும் லட்டுகள் பக்தர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்பு

சுவாமிக்குப் படைக்கப்படுகிறது. பக்தர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்டு இலவசமாகவும், கூடுதல் லட்டு ரூ.50க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கொண்டைக்கடலை மாவு, சர்க்கரை, கற்கண்டு, முந்திரி, ஏலக்காய், திராட்சை, அரிசி மாவு, நெய் உள்ளிட்ட பொருள்களை ஒரேசீரான அளவில் கலந்து திருப்பதி லட்டு பல ஆண்டுகாலமாக ஒரே சுவையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த லட்டுவின் சிறப்பம்சமே அதில் சேர்க்கப்படும் தரமான பொருள்களும் நெய்யும்தான்.

இந்த லட்டுகளைத் தயாரிக்க தினமும், 400–500 கிலோ நெய், 750 கிலோ முந்திரி, 500 கிலோ திராட்சை, 200 கிலோ ஏலக்காய் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, ஆண்டுக்கு சுமார் 5,00,000 கிலோ நெய் தேவைப்படுகிறது. இவற்றுக்கான கொள்முதல் செயல்முறையானது ஆன்லைன் ஏலத்தை உள்ளடக்கியது. இது, 6 மாதத்திற்கு ஒருமுறை நடைபெறுகிறது. அதிலும் நீண்ட பரிசோதனைக்குப் பின்பே ஒப்பந்தம் வழங்கப்படுகிறது.

கர்நாடக அமைப்பிடமிருந்து திருப்பதி அறக்கட்டளை தற்போது 1 கிலோ நெய் ரூ.475 என்ற விலையில் வாங்குகிறது. கோயிலில் தயாரிக்கப்படும் ஒவ்வொரு லட்டுவின் தரத்தையும் உறுதி செய்வதற்காக திருப்பதி திருமலை தேவஸ்தானம் ஓர் அதிநவீன உணவுப் பரிசோதனை ஆய்வகத்தை பராமரித்து வருகிறது. அந்த வகையில், ஒவ்வொரு லட்டுவும் 175 கிராம் எடையுடனும், அதன் நிமி நிலையை தக்கவைக்க முந்திரி, சர்க்கரை மற்றும் ஏலக்காய் ஆகியவற்றின் துல்லியமான அளவுடனும் இருக்க வேண்டும்.

மேலும்,திருமலைதிருப்பதிதேவஸ்தானம் (ஜிஜிஜி) குழு சப்ளையர்களை ஆய்வுசெய்து சுகாதாரம் மற்றும் தரமான தரத்தை உறுதிப்படுத்துகிறது. அனைத்துப் பொருட்களும் சமையலறையில் பயன்படுத்தப்படுவதற்கு முன் கடுமையான தரச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும், கூடுதலாக, லட்டு மாதிரிகள் ஹைதராபாத்தில் உள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் நியூட்ரிஷனுக்கு மேலதிக பரிசோதனைக்காக அடிக்கடி அனுப்பப்படுகின்றன. இந்த லட்டுகளைத் தயாரிக்க, சுமார் 600 நிபுணத்துவ சமையல்காரர்கள் தினம் இரண்டு ஷிப்டுகளில் பணிபுரிகிறார்கள். தினமும் 3,50,000 லட்டுகள் வரை தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. சிறப்பு நாட்களில் 4,00,000 லட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. திருப்பதி லட்டு விற்பனையின் மூலம், ஏழுமலையான் கோயிலுக்கு ஆண்டுக்கு ரூ.500 கோடி வருவாய் கிடைக்கிறது

ஏழுமலையானை தரிசனம் செய்துவிட்டு, வீட்டு திரும்புவதற்கு பல நாட்கள் ஆனது. அவர்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக, எளிதில் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக லட்டுக்களை பிரசாதமாக தயாரித்து கொடுக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பெரிய அளவிலேயே லட்டு பிரசாதம் இலவசமாக பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. ஆரம்ப காலத்தில் கொடுக்கப்பட்டு வந்த பெரிய அளவிலான லட்டும், தற்போது குறைந்த அளவிலேயே தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதற்கு 'கல்யாண லட்டு' என்று பெயர். திருக்கல்யாண உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு இந்த லட்டு, பிரசாதமாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட தலைவர்களுக்கு வழங்கப்படும் லட்டு 750 கிராம் கொண்டதாக இருக்கும். லட்டு பிரசாதம் தயாரிப்பதற்கு கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக விறகு அடுப்பு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. திருப்பதி லட்டின் வடிவம் தற்போது வரை 6 முறை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

# மருத்துவம், பொறியியல் படிப்புக்கான
# தமிழ்வழி புத்தகங்கள் தயார்




மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்கல்வி சார்ந்த படிப்புகளுக்கான பாடப்புத்தகங்களை தமிழில் மொழிப் பெயர்க்கும் பணிகள் கடந்த 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன.

இந்த பணியை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேற் கொண்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து நடப்பாண்டில் மருத்துவப்படிப்புக்கான 700 முதல் 800 பக்கங்களை கொண்ட 'மருத்துவ நுண்ணுயிரியியல்', 'மகப்பேறு மருத்து வம்' ஆகிய 2 புத்தகங்கள், பொறியியல் படிப்புக்கான 4 புத்தகங்கள், இதுதவிர அரசு கலைக்கல்லூரி உள்ளிட்ட உயர்கல்வி சார்ந்த படிப்புகளுக்கான ஆங்கில வழி புத்தகங்கள், தமிழ்வழியில் மொழி பெயர்க்கப்பட்டு இருக் கின்றன.

அதேபோல், ஆங்கில இலக்கியங்கள் தமிழிலும், தமிழ் இலக்கி யங்கள் ஆங்கில மொழி உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற உயர்கல்வி சார்ந்த 200 பாடப்புத்தகங்களை ஒவ்வொரு ஆண்டும் மொழி பெயர்த்து வெளியிட தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இலக்கு நிர்ணயித்து பணிகளை மேற்கொள்கிறது. அதன்படி, தற்போது வரை 120 புத்தகங்கள் மொழி பெயர்க்கும் பணிகள் முடிந்து நவம்பரில் வெளியிட உள்ள நிலையில், மீதமுள்ள புத்தகங்கள் வருகிற ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்குள் வெளியிட திட்டமிட்டி ருக்கின்றனர்.

# தொழிலாளர்கள் அலுவலக அதிகாரிகள் அலட்சியத்தால் ஏமாற்றும் வியாபாரிகள்

திருப்பூர் மாநகரத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை பல்லடம் ரோடு சந்தையில் காய்கறிகள் பழங்கள் மளிகை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது இந்நிலையில் சந்தையில் வியாபாரிகள் ஏமாற்றும் விதமாக முத்திரையிடப்படாத எடை கற்கள் மிஷின்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகிறார்கள் இதனால் பொதுமக்களுக்கு எடை குறைவாக விற்பனை செய்து வருகிறார்கள் வியாபாரிகள் இவற்றையெல்லாம் கண்காணிக்க வேண்டிய தொழிலாளிஅலுவலர்கள் ஒரு நாள் கூட ஆய்வு செய்வதில்லை என்று குற்றச்சாட்டு வருகிறது இப்படி எடை குறைவாக நடந்து கொண்டிருப்பது தொழிலாளி அலுவலகத்திற்கு தெரியுமா? தெரியாதா? என்று கேள்விக்குறியாக உள்ளது. தொழிலாளர் அலுவலகத்தில் ஆய்வாளர் உதவியாளர் இவர்களெல்லாம் திருப்பூரில் இருக்கிறார்களா ? இல்லையா? என்று பல பேருக்கு தெரியாது அது ஒரு புறம் இருக்கட்டும் வியாபாரிகளிடம் சந்தையில் முத்திரையிடாத தராசு பயன்படுத்தி வருவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் பிறகு அதுசமயம் வியாபாரிகள் மின்னணு தராசுகள் மேடை தராசுகள் வருடத்திற்கு ஒருமுறை முத்தரிட்டு சர்டிபிகேட் வாங்க வேண்டும் மற்ற தராசுகள்பயன்படுத்துவோர் இரண்டு வருடத்துக்கு ஒரு முறையும் முத்திரையீட்டு சான்றிதழ் வாங்க வேண்டும் ஆனால் அப்படி யாரும் செய்வதில்லை இதனால் பொதுமக்களுக்கு வழங்க வேண்டியபொருள்களின் எடை குறைவாக வியாபாரிகள் லாபத்துக்காகஎடை குறைவாக பயன்படுத்தி வருகிறார்கள் இப்படி ஏமாற்றுபவர்கள் மீதுதொழிலாளர் அதிகாரிகள் அவதாரம் விதித்து தராசுகளை பறிமுதல் செய்தால் மட்டுமே போதாது அவதாரம் விதிக்க வேண்டும் அப்படி செய்தால் மட்டும் இது போன்ற சம்பவம் நடக்காது ஆனால் அதிகாரிகள் செய்வதில்லை அதற்கு மாறாக அலுவலகத்தில் உறங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர் ஆனால் வியாபாரிகள் பல்லடம் ரோட்டில் இருக்கும் சந்தையில் பல வியாபாரிகள் எடை குறைவாக மெஷின்களை வைத்துபொதுமக்களைபொருட்களை எடை குறைவாகவழங்கி ஏமாற்றி பிழைப்பு நடத்தி வருகிறார்கள் இதற்கு தீர்வு காண ஒரே வழி அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்தால் மட்டுமே இதுபோன்ற சம்பவங்கள் நடக்காது என்று பொதுமக்கள் வேதனையாக தெரிவித்து வருகின்றனர். தொழிலாளி அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?



**கல்பனா சாவ்லா மரணத்தால் பயந்த நாசா...**

# பூமிக்கு திரும்பும் ஸ்டார் லைனர் சுனிதா வில்லியம்ஸ் நிலை?

இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், மற்றும் புட்ச் வில்மோர் கடந்த ஜூன் 5 ஆம் தேதி ஸ்டார் லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்றனர். அங்கு அவர்கள் ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுனிதா மற்றும் புட்ச் ஆகியோர் ஆய்வு பணிகளை முடித்துக் கொண்டு எட்டு நாட்களில் பூமிக்க திரும்ப திட்டமிடப்பட்டு இருந்தது.

ஆனால், ஸ்டார் லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இருவரும் பூமிக்குத் திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதன் காரணமாகக் கடந்த 80 நாட்களாக சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் இருவரும் சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ளனர்.

இருவரையும் பூமிக்கு அழைத்த வர இருந்த ஸ்டார் லைனர் விண்கலம் தற்போது இவர்கள் இன்றி வரும் செப்டம்பர் 6 ஆம் தேதி மாலை 6.04 மணிக்குப் பூமியை நோக்கிய பயணத்தைத் தொடங்கும் ஸ்டார் லைனர் விண்கலம் என்று சுமார் 6 மணி நேரம் பயணித்து விண்கலம் மறுநாள் 12.03 மணிக்கு பூமியை அடையும் என்று நாசா அறிவித்துள்ளது.

பூமிக்குத் திரும்ப உள்ள ஸ்டார் லைனர் விண்கலத்திலேயே ஏன் இவர்கள் இருவரையும் அழைத்து வர வில்லை என்று நாசா விளக்கம் ஒன்றையும் அளித்துள்ளது.



அதாவது, இதுபோன்ற பயணத்தின்போது விண்கலம் வெடித்து உயிரிழந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீரர் கல்பனா சாவ்லாவின் மரணமே தற்போது சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோரை பழுதுபட்ட விண்கலத்தில் அழைத்து வர வேண்டாம் என்ற முடிவை நாசா எடுக்க காரணமாக அமைத்துள்ளது.

இதனாலேயே இன்னும் 8 மாதங்கள் கழித்து அடுத்த வருடம் பிப்ரவரியில் இருவரையும் பூமிக்கு அழைத்து வரும் முடிவுக்கு நாசாவை தள்ளியுள்ளது.

கடந்த காலங்களில் நாங்கள் தவறு செய்துள்ளோம் என்ற நாசாவைச் சேர்ந்த பில் நெல்சனின் கூற்று இதை உறுதிப்படுத்துகிறது.

கடந்த 2003ஆம் ஆண்டு நாசா சார்பில் விண்வெளி ஆராய்ச்சி பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் போது விண்கலம் வெடித்து சிதறியதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளி புரிய வைத்த கிரெடிட் கார்டு சூட்சுமம்..

## வங்கிகள் தரும் சலுகைகளின் பின்னணி

எங்கள் கிரெடிட் கார்டை வாங்கினால், மொபைல் பில்லுக்கு 25 சதவீதம் கேஷ்பேக் கிடைக்கும். ஸ்விக்கி , ஜொமோடோவில் கேஸ்பேக் ஆபர் மற்றும் கேஸ், மின்சார பில் என பல ஆபர்கள் அள்ளி தரப்படுகின்றன. எந்த நம்பிக்கையில் கிரெடிட் கார்டுகள் மூலம் அவ்வளவு சலுகைகளை அள்ளி அள்ளி வங்கிகள் தருகின்றன. அதன்பின்னால் உள்ள சூட்சுமம் பற்றி தெரியுமா? இதனை பாருங்கள்.

இன்றைக்கு நம்மை சுற்றியுள்ள நவீன பொருளாதாரம் எப்படி என்றால், அத்தனை ஆடம்பரமான பொருட்களையும் வாங்கி கொள்ள வேண்டும். ஆனால் அது சாமானியர்களுக்கு சாத்தியமா.. சாத்தியமாக்குவது தான் இந்த பொருளாதாரத்தின் நோக்கமாக உள்ளது. ஆனால் பணமே இல்லாத ஒருவரால், கார், பைக் எல்லாம் வாங்க முடியுமா என்றால், நிச்சயம் வாங்க முடியாது. ஆனால் இஎம்ஐ மூலம் இந்த வசதி அளிக்கப்படுகிறது.

இதேபோல் தான் சம்பளம் வருவதற்கு முன்பே வீட்டின் செலவுகளை செய்ய கிரெடிட் கார்டுகள் மூலம் கடன் தரப்படுகிறது. பணமே இல்லாவிட்டால் அமைதியாக இருக்கும் மக்கள், கிரெடிட் கார்டு கையில் இருப்பதால், வேண்டிய பொருட்கள், வேண்டாத பொருட்கள் என எல்லாவற்றையும் வாங்கி குவிக்கிறார்கள். இதன் மூலம் தான் வங்கிகளுக்கு மிகப்பெரிய லாபம் ஆகும். தனிநபர் கடன், வீட்டுக்கடன், வாகன கடன், நகைக்கடன் என எல்லா கடனையும் விட கிரெடிட் கார்டு கடனுக்கு வட்டி அதிகம் ஆகும். ஒவ்வொரு மாதமும் சரியாக பணத்தை கட்டிவிட்டால் கிரெடிட் கார்டுகள் மிகப்பெரிய வரமாக இருக்கும். ஆனால் மொத்த பணத்தையும் சரியாக கட்டாவிட்டால், அவர்களை படுகுழியில் தள்ளிவிடும்.




கிரெடிட் கார்டுகளை மக்களை வாங்க வைக்க ஏராளமான சலுகைகளை ஒவ்வொரு வங்கிகளும் தருகின்றன. மாதத்திற்கு இரண்டு இலவச மூவி டிக்கெட், மொபைல் பில்களில் 25 சதவீதம் வரை கூட கேஷ் பேக், மின் கட்டணம், கேஸ் பில்லிற்க 10 சதவீதம் கேஷ் பேக், ஸ்விக்கி, ஜொமோட்டாவில் 10 சதவீதம் கேஷ்பேக், 500 ரூபாய் வரை அமேசான் வவுச்சர், பெட்ரோல் போட்டால் ஒரு சதவீதம் தள்ளுபடி, விமானங்களில் டிக்கெட் கட்டணம் தள்ளுபடி, ஓட்டல்களில் தங்குவதற்கு கட்டணம் தள்ளுபடி, சுற்றுலா பேக்கேஜ் தள்ளுபடி

பல்வேறு நுகர்வு சார்ந்த தள்ளுபடிகள் வாங்கப்படுகின்றன. இதுதவிர பல்வறு ஆன்லைன் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு, கிரெடிட் கார்டில் வாங்குவோருக்கு பல பொருட்களுக்கு தள்ளுபடி அறிவிக்கப்படுகின்றன. 2000 வரை கூட சில கிரெடிட் கார்களுக்கு தள்ளுபடி தரப்படுகிறது.

இப்படி கிரெடிட் கார்டுகளுக்கு பல்வேறு சலுகைகளை நிறுவனங்கள் அளிக்க காரணம், அதிகப்படியான விஷயங்களை வாங்கி, அதற்கு வட்டி மட்டும் நிலைக்கு கொண்டு வருவதுதான். கிரெடிட் கார்டுகளை பொறுத்த வரை தனக்கு வேண்டிய பொருட்களை மட்டுமே வாங்கி அதனை சரியான முறையில் பயன்படுத்தினால் அது மிகப்பெரிய லாபமாக இருக்கும்.

மாறாக அந்த கிரெடிட் கார்டில் தள்ளுபடி தருகிறார்கள் என்பதற்காக சம்பளத்தை பற்றி சிந்திக்காமல், அளவுக்கு மீறி இஎம்ஐயில் பொருட்களை வாங்குவது, அவசரத்திற்கு பணம் எடுப்பது, ஓட்டலில் சாப்பிடுவது, பார்களில் மது அருந்துவது, ஜவுளிக்கடைகளில் பொருட்கள் வாங்குவது, அவசியம் இன்றி ஆடம்பரமாக மொபைல், டிவி, பிரிட்ஜ், வாஷிங் மெஷின், ஏசி, மெத்தை போன்றவற்றை அதிக விலைக்கு வாங்குவது போன்றவை சிக்கலை ஏற்படுத்தும்.

வீட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை சேமித்து வாங்கினால் பிரச்சனை இல்லை.. ஆனால் சம்பளத்தை பற்றி யோசிக்காமல், அதனை கிரெடிட் கார்டில் வாங்கினால் அது சிக்கலாக்கும். அன்றாட செலவுக்கு கூட கிரெடிட் கார்டை பயன்படுத்த தொடங்கினால் அது சிக்கலில் தான் பலருக்கு முடிகிறது.. எனினும் சிலர் எந்த ஆடம்பரத்தையும் விரும்பாமல் அற்புதமாக வாழ்ந்து பணத்தை சேமிக்கிறார்கள்.

திருப்பூரில் வசிக்கும் பனியன் தொழிலாளி ஒருவர், வெறும் 800 ரூபாய் தினசரி சம்பாதிக்கிறார். அவர் மனைவி 400 ரூபாய் சம்பாதிக்கிறார். அவரிடம் நல்ல செல்போன் இல்லை.. பெரிய கட்டில் இல்லை.. மிகப்பெரிய ஸ்மார்ட் டிவி இல்லை (சாதாரண டிவியே உள்ளது).. நல்ல தரமான ஸ்கூட்டர் இல்லை (பழைய பைக் உள்ளது) .. அரசு பள்ளியில் தான் மகள் படிக்கிறார்.. அவருக்கு எந்த கடனும் இல்லை. சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் சேர்த்து சொந்தமாக வீடே (கடன் இல்லாமல்) வாங்கி விட்டார்.


அவரிடம் ஏன் இப்படி இருக்கீங்க என்று கேட்ட போது, நான் ஜியோ போன் தான் ,வைத்திருக்கிறேன். பெரிய செல்போன் வாங்கினால், அதற்கு இஎம்ஐயில் விழுக வேண்டும். அதேபோல் ஸ்மார்ட் டிவி எடுத்தால் அதற்கும் இஎம்ஐ கட்ட வேண்டும். ஸ்கூட்டர் எடுத்தால் அதற்கும் இஎம்ஐ கட்ட வேண்டும். மகளை மெட்ரிகுலேசனில் சேர்த்தால் அதற்கும் பணம் பெரிதாக கட்ட வேண்டும்.. பைக்கை மாற்றினால் அதற்கும் பணம் கட்ட வேண்டும் இவற்றை நான் விரும்பவில்லை... இருப்பதை கொண்டு வாழ்கிறேன். தேவை ஏற்பட்டால் மட்டும் மிகச்சிறிய அளவில் பொருட்களை வாங்கி கொள்வேன்.ஓட்டலில் போய் மாதம் மாதம் சாப்பிடமாட்டேன். எந்த ஆடம்பரத்திலும் விழுகாத காரணத்தால் சம்பாதித்த பணத்தை சேர்த்து இன்று திருப்பூரில் வீடே வாங்கிவிட்டேன் என்றார். உண்மையில் அவருக்கு எந்த கடனும் இல்லை.

திருப்பூர் பொறுத்தவரை மேற்சொன்ன எல்லா பொருட்களுக்காகவும் தான் கடன் வாங்குகிறார்கள். கடனிலேயே வாழ்கிறார்கள். இதுதான் கிரெடிட் கார்டுகளின் சூட்சுமமாக இருக்கிறது. ஆடம்பரத்தில் மயங்கி விழுவோரை மட்டுமே கிரெடிட் கார்டுகள் காலி செய்கின்றன. அதேநேரம் புத்திசாலித்தனமாக உள்ளவர்கள் கிரெடிட் கார்டுகளை மிக மிக அத்தியாவசிய தேவைக்கு பயன்படுத்தி ஆபர்களை அள்ளுகிறார்கள். சரியாக பணத்தை கட்டியும் விடுகிறார்கள். இதன் மூலம் கணிசமான பணத்தை சேமிக்கவும் செய்கிறார்கள்.

# திருப்பூர் சத்யாவின் 30 உல்லாச வீடியோ..

## பிரபல நபருமா?

# 1 வாரம் குடும்பம் நடத்தும் சீக்ரெட்



**திருப்பூர் சத்யா வழக்கில் பரபரப்பு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கிறது.. அத்துடன் சத்யாவின் தோழி தமிழ்ச்செல்வியையும் போலீசார் தீவிரமாக தேடி கொண்டிருக்கிறார்கள்..**

கொடிமுடியை சேர்ந்த 30 வயது பெண் சத்யாவுக்கு ஏற்கனவே திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் உள்ளது. ஆனால், தனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்று பொய் சொல்லி, மேட்ரிமோனியலில், திருமணமாகாத இளைஞர்களை குறிவைத்து, அவர்களை திருமணம் செய்து ஏமாற்றி பணம், நகை மோசடி செய்து வந்துள்ளார்.

தாராபுரத்தை சேர்ந்த 30 வயது பேக்கரி ஓனர் மூலம் சத்யாவின் குட்டு அம்பலமானது. அரசு அதிகாரிகள், சர்வேயர், டிஎஸ்பி, சப்–இன்ஸ்பெக்டர், சாப்ட்வேர் என்ஜினீயர், திருமணமாகாத இளைஞர்கள், தொழிலதிபர்கள் , அரசியல்வாதிகள், ஆடு மேய்ப்பவர்கள், மாடு மேய்ப்பவர்கள் என 55 பேரை ஏமாற்றி திருமணம் செய்துள்ளதாகவும், லட்சக்கணக்கில் இவர்களிடம் நகை, பணத்தை சத்யா பறித்ததாகவும் ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன

அதேபோல, மேட்ரிமோனியில் பெண் தேடி வரும் ஆண்களின் செல்போன் நம்பருக்கு பேசி அவர்களை தனிமையில் சந்தித்து, பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்று உல்லாசமாகவும் இருப்பாராம் சத்யா. இதை ரகசியமாக வீடியோ எடுத்து, பணம், நகை கேட்டு அவர்களை மிரட்டுவாராம். எனவே, சத்யாவின் செல்போனை போலீசார் ஆராய உள்ளதாகவும் தகவல் வெளியாகியிருந்தன.

இந்நிலையில்தான், சத்யாவின் தோழி தமிழ்ச்செல்வி தற்போது போலீசில்

கைதாகி உள்ளார். இவர் சத்யாவுக்கு புரோக்கராகவும் செயல்பட்டு வந்தவர்.. எனவே இவரை பிடித்து விசாரித்தால், பல உண்மைகள் தெரியவரும் என்பதால், மிக தீவிரமான வேட்டைக்கு பிறகு தாராபுரம் மகளிர் போலீசார் தமிழ்ச்செல்வியை கைது செய்தனர்.

திருப்பூர் சத்யா வழக்கில் பரபரப்பு உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கிறது.. அத்துடன் சத்யாவின் தோழி தமிழ்ச்செல்வியையும் போலீசார் தீவிரமாக தேடி கொண்டிருக்கிறார்கள்..

கொடிமுடியை சேர்ந்த 30 வயது பெண் சத்யாவுக்கு ஏற்கனவே திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் உள்ளது. ஆனால், தனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்று பொய் சொல்லி, மேட்ரிமோனியலில், திருமணமாகாத இளைஞர்களை குறிவைத்து, அவர்களை திருமணம் செய்து ஏமாற்றி பணம், நகை மோசடி செய்து வந்துள்ளார்.

அதேபோல, மேட்ரிமோனியில் பெண் தேடி வரும் ஆண்களின் செல்போன் நம்பருக்கு பேசி அவர்களை தனிமையில் சந்தித்து, பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்று உல்லாசமாகவும் இருப்பாராம் சத்யா. இதை ரகசியமாக வீடியோ எடுத்து, பணம், நகை கேட்டு அவர்களை மிரட்டுவாராம். எனவே, சத்யாவின் செல்போனை போலீசார் ஆராய உள்ளதாகவும் தகவல் வெளியாகியிருந்தன.

இந்நிலையில்தான், சத்யாவின் தோழி தமிழ்ச்செல்வி தற்போது போலீசில் கைதாகி உள்ளார். இவர் சத்யாவுக்கு புரோக்கராகவும் செயல்பட்டு வந்தவர்.. எனவே இவரை பிடித்து விசாரித்தால், பல உண்மைகள் தெரியவரும் என்பதால், மிக தீவிரமான வேட்டைக்கு பிறகு தாராபுரம் மகளிர் போலீசார் தமிழ்ச்செல்வியை கைது செய்தனர்.

தமிழ்ச்செல்வியிடம் விசாரணையும் நடத்தப்பட்டதில், பல்வேறு திடுக் தகவல்களை போலீசாரிடம் தெரிவித்துள்ளார்.

> **“பார்ப்பதற்கு வசதி குறைவாக இருக்கும்படியான அம்மா, அப்பாக்களை தேர்ந்தெடுப்பார்கள். பிறகு மாப்பிள்ளை வீட்டாரிடம், சத்யா வீட்டில் வசதி குறைவு.. அதனால், நீங்களே நகை போட்டு இந்த கல்யாணத்தை செய்து கொள்ள வேண்டும் என்று தமிழ்ச்செல்வி பேசுவாராம். பல காலம் பெண் கிடைக்காமல் தவித்து கிடக்கும் மாப்பிள்ளை வீட்டினரும், இதற்கு சம்மதம் சொல்லி, சத்யாவுக்கு 10 முதல் 20 பவுன் நகை வரை கொடுத்து கல்யாணம் செய்து கொண்டு போவார்களாம்.”**

“தமிழ்செல்வியின் கணவர் அவரைவிட்டு பிரிந்து சென்றுவிட்டதால், வேறொருவருடன் தமிழ்ச்செல்வி வசித்து வருகிறார்.

கடந்த 2021-லிருந்தே சத்யாவுடன் தமிழ்ச்செல்விக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது. அப்போதிருந்து பேஸ்புக் மற்றும் ஆன்லைன் வழியாக பெண் பார்ப்பவர்களை நோட்டமிட்டு பணம் பறிக்க திட்டமிட்டுள்ளனர்.. பெண் பார்ப்பவர்களிடம் அணுகி, தன்னை புரோக்கர் என்று அறிமுகப்படுத்தி கொள்வாராம் தமிழ்ச்செல்வி.. உடனே சத்யாவின் படத்தை காட்டி, திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்வாராம்.

முக்கியமாக குறிப்பாக வசதி படைத்தவர்களை மட்டும் தேர்வு செய்து சத்யாவுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார் தமிழ்ச்செல்வி.. இதற்காக புரோக்கர் கமிஷனையும் மாப்பிள்ளை வீட்டில் வாங்கி கொள்வாராம். சத்யாவுக்கு அம்மா, அப்பா, சில சொந்தக்காரார் என் அனைவரையும் வாடகைக்கு நியமித்து விடுவார்கள்

பார்ப்பதற்கு வசதி குறைவாக இருக்கும்படியான அம்மா, அப்பாக்களை தேர்ந்தெடுப்பார்கள். பிறகு மாப்பிள்ளை



வீட்டாரிடம், சத்யா வீட்டில் வசதி குறைவு.. அதனால், நீங்களே நகை போட்டு இந்த கல்யாணத்தை செய்து கொள்ள வேண்டும் என்று தமிழ்ச்செல்வி பேசுவாராம். பல காலம் பெண் கிடைக்காமல் தவித்து கிடக்கும் மாப்பிள்ளை வீட்டினரும், இதற்கு சம்மதம் சொல்லி, சத்யாவுக்கு 10 முதல் 20 பவுன் நகை வரை கொடுத்து கல்யாணம் செய்து கொண்டு போவார்களாம்.

சரியாக 1 வாரம் மட்டும் மட்டும்தான், அந்த மாப்பிள்ளையுடன் குடும்பம் நடத்துவாராம் சத்யா. மாப்பிள்ளை ஏமாளி என்றால், 2 நாட்களே சத்யாவுக்கு போதுமாம். ஒரு வாரம் குடும்பம் நடத்தி விட்டு, நகை, பணத்துடன் அங்கிருந்து சத்யா, இன்னொரு ஊருக்கு சென்றுவிடுவாராம். இப்படி 20–க்கும் மேற்பட்டோரை ஏமாற்றியிருக்கிறாராம் சத்யா.

இதில் இன்னொரு அதிர்ச்சி என்னவென்றால், கல்யாணம் செய்து கொள்ளாமல் கணவன்– மனைவியாக வாழ்வதற்கும் தமிழ்செல்வி சத்யாவை பயன்படுத்தி வந்துள்ளார்.. இதுபோல 30–க்கும் மேற்பட்டோருடன் தனிமையில் உல்லாசமாக சத்யா இருந்துள்ளதாகவும், இதை வீடியோ மற்றும் போட்டோக்களை எடுத்து எடுத்துக் கொண்டு அவர்களை மிரட்டி ரூ.10 முதல் 20 லட்சம் வரை பணம் பறித்திருப்பதாகவும் தகவல் வெளியாகியிருக்கிறதுஇதில் சில முக்கிய பிரமுகர்களும் அடக்கம் என்கிறார்கள்.

இதுவரை 53 பேரிடம் ஏமாற்றி பணம் பறித்து சொகுசு வாழ்க்கையை இந்த 2 பெண்களும் வாழ்ந்து வந்துள்ளது தெரியவந்துள்ளது. இப்போது சத்யாவின் பெயரில் கொடுமுடி அருகே ரூ.4 கோடி மதிப்பிலான இடம் வாங்கி உள்ளதாம்..

பேங்க் லாக்கர்: திருமணத்திற்காக ஒவ்வொரு மாப்பிள்ளை வீட்டிலும் போடும் நகைகள், தமிழ்ச்செல்வி பெயரில் பேங்க் லாக்கரில் இருக்கிறதாம். இவ்வளவும் தமிழ்ச்செல்வியிடம் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளதையடுத்து, போலீசார் தொடர்ந்து தமிழ்ச்செல்வியிடம் விசாரணை நடத்தி கொண்டிருக்கிறார்களாம். ஏற்கனவே, முக்கிய பிரபலங்கள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள், அப்பாவி நபர்கள் என லிஸ்ட் நீள்வதாக தகவல் வெளியாகியிருந்தது. அதேபோல சத்யாவின் செல்போனை ஆய்வு செய்ய போவதாகவும் கூறப்பட்டது.

அந்தவகையில், போலீசார் இந்த மோசடி விவாகரத்தில் முனைப்பு காட்டி, விசாரணையை தீவிரப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். எப்படியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் பெற்று தந்து, அவர்களின் பணம், நகைகளை மீண்டும் ஒப்படைப்பார்கள் என்றும் நம்பப்படுகிறது.





நகராட்சி நிர்வாகம் நகர்ப்புற மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு K.N.நேரு அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் கூட்டில் முயற்சி இதழை வழங்கிய பொழுது

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு இ. பெரியசாமி அவர்களிடம் தேனி மாவட்டம் ஆய்வுக்கு சென்ற பொழுது கூட்டில் முயற்சி மாத இதழ் வழங்கிய பொழுது






திருவல்லிக்கேணி D1 காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு. பிரகாஷ் அவர்களிடம் கூட்டில் முயற்சி மாத இதழ் வழங்கிய பொழுது

C1 பூக்கடை காவல் நிலையம் காவல் ஆய்வாளர் திரு. தட்சணாமுர்த்தி. A. C. அவர்களிடம் கூட்டில் முயற்சி மாத இதழ் வழங்கிய பொழுது

# அனைத்து விழாக்களிலும் திமுக அரசு ஆட்சியில் இருக்கிறது

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

வெள்ளி விழா, பொன் விழா,பவள விழாவின்போது ஆட்சியில் இருப்பதுபோல, நூற்றாண்டு விழாவின் போதும் திமுக ஆட்சியில் இருக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்தார்.

சென்னை நந்தனத்தில் நடந்த திமுகவின் பவள விழா மற்றும் முப்பெரும் விழாவில் முதல்வர் பேசியதாவது: தொண்டர்களின் வியர்வை, மூச்சுக் காற்றால்தான் திமுக கம்பீரமாக, தலை நிமிர்ந்து நிற்கிறது. நீங்கள் இல்லாமல் திமுக இல்லை; நானும் இல்லை.

கடந்த 1967-ம் ஆண்டு எனது 13 வயதில் கோபாலபுரத்தில் திமுக இளைஞர் அணியை தொடங்கி,53 ஆண்டு இயக்கத்துக்கும், தமிழகத்துக்கும் உழைத்த உழைப்புக்கான அங்கீகாரம்தான் தற்போதுபவளவிழா காணும் திமுகவுக்கு நான் தலைவராக இருப்பது.

திமுக தலைவர் என்ற தகுதியை வழங்கியது நீங்கள்.தமிழகத்தின் முதல்வர் என்ற தகுதியை வழங்கியது தமிழக மக்கள். கழகமும், தமிழகமும் என் இரு கண்களாக கொண்டு செயல்பட்டு வரும் இந்த நேரத்தில், பவள விழா கொண்டாடுவதை வாழ்நாள் பெருமையாக கருதுகிறேன்.

விருதாளர்கள் அனைவரும் ஒவ்வொரு வகையில் பெருமைக்கு உரியவர்கள். பவள விழா விருது என்பதால் கூடுதல் சிறப்பு உள்ளது. உங்களை போன்றவர்களின் உழைப்பால்தான் கட்சி உன்னதமான நிலைக்கு வந்துள்ளது. ஓர் இயக்கம் 75 ஆண்டுகள் தாண்டியும் நிலைத்திருப்பது சாதாரண சாதனை அல்ல. இதற்கு நமதுஅமைப்பு முறைதான் காரணம். லட்சம் கிளைக் கழகம் கொண்டதுநமது தலைமைக் கழகம். அதற்கான வலுவான அடித்தளத்தை





முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அமர்ந்திருப்பது போன்று 'ஏஐ' தொழில்நுட்ப உதவியுடன் திரையில் தோன்றிய காட்சி.

தலைவர்கள் உருவாக்கி தந்துள்ளனர்.

உலகத்தில் எந்த இயக்கமும் உடன்பிறப்பு என்ற பாச உணர்வுடன் கட்டமைக்கப் படவில்லை. அந்த உணர்வுதான் நம் எல்லோரையும் இயக்குகிறது. வெள்ளிவிழா, பொன்விழா, பவள விழா கொண்டாடிய ஆண்டுகளில் திமுக ஆட்சியில் உள்ளது. வரும் 100-வது ஆண்டும் நிச்சயம்ஆட்சியில் இருக்கும். திமுகவின் தேவை இன்னும் 100 ஆண்டுகளுக்கு இருக்கிறது. அடுத்தடுத்த தேர்தல்களிலும் நாம்தான் வெற்றி பெறப் போகிறோம்.

இதை ஆணவத்தில் சொல்லவில்லை. உங்கள்மீதான நம்பிக்கையில் கூறுகிறேன். யாரும் மெத்தனமாக இருக்க வேண்டாம். தொடர் வெற்றிகளால் நூற்றாண்டை நோக்கி முன்னேறுவோம். இந்த உணர்வு வெற்றிச் சரித்திரமாக மாற வேண்டும். அதற்கு பவள விழா ஆண்டில் உறுதியேற்போம். இவ்வாறு முதல்வர் பேசினார்.

**காலம் தாழ்த்தாதீர்கள்:** விழாவில், மு.க.ஸ்டாலின் விருது பெற்ற பழனிமாணிக்கம் தனது ஏற்புரையில், "திமுகவில் வெள்ளி விழா, பொன்விழாவை கருணாநிதியும், பவளவிழாவை நீங்களும் கொண்டாடியுள்ளீர்கள். வைரவிழா ஆண்டை கொண்டாடவும், எங்களை வழிநடத்தவும் நீங்கள் ஒருவரை அடையாளம் காட்டவேண்டும்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் மேகம் சூழ்ந்துவிட்டது. உங்களுக்கும், மேடையில் உள்ள தலைவர்களுக்கும் ஏன் இன்னும் தயக்கம். உதயநிதியை துணை முதல்வராக்க வேண்டாமா? பேராசிரியரைவிட பெரிய தலைவர் யாரும் இல்லை. பேராசிரியர் பெரிய மனதுடன் தலைவரை துணை முதல்வராக அன்று ஏற்றுக்கொண்டார். நாங்களும் ஏற்றுக்கொள்வோம். காலம் தாழ்த்தாதீர்கள்" என்றார். விழாவில் சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை தெற்கு மாவட்ட திமுக துணை செயலாளர் பாலவாக்கம் த.விஸ்வநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.






# திருப்பூர் மாநகராட்சியில்

# நடைபெறும் திருவிளையாடல்...!

## குப்பையில் கூடி கொள்ளை அடிக்கும் அவலம்..!

## எங்கே...? எப்படி...?








தமிழகத்தில் பல மாநகராட்சிகளை மேம்படுத்து வதற்காக மத்திய அரசு கொண்டு வந்த ஸ்மார்ட் சிட்டி திட்டம் பல வகையில் திருட்டுத்தனம் செய்து பணம் பார்க்க மட்டும் பயன் பட்டு வருவதாக பொதுமக்கள் இடையே பலத்த சந்தேகம் ரொம்ப நாளாக இருந்து வருகிறது. அதிமுக ஆட்சி காலத்தில் துவங்கிய இத்திட்டம் தற்போது திமுக ஆட்சி காலத்தில் கூட முழுமை அடையாமல் அரையும் குறையுமாக கிடப்பதை இத்திட்டம் நடைபெறும் பல்வேறு மாநகராட்சிகளில் கண் கூடாக காண முடிகிற காட்சியாக இருந்து வருகிறது. மத்திய அரசு மாநகராட்சிகளின் மெத்தன போக்கிற்கும்,கனிசமான லஞ்சத்தை பெற்றுக்கொண்டு தரமில்லாத பணிகளை செய்து வரும் மாநகராட்சிகளை ஆய்வு செய்து 'ரிவிட் 'அடிக்க வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பாக இருக்கிறது.

ஸ்மார்ட் சிட்டி திட்டம் என்ற பெயரில் நடைபெறும் பணிகள் அனைத்தும் மக்களுக்கு போதிய பயன் தராத வெறும் அலங்கார வேலையாக தெரிகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான், வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரிப்பதற்காக மூன்று சக்கர வாகனங்களை கொள்முதல் செய்தது பல மாநகராட்சிகள். இந்த வாகனம் அனைத்தும் தற்போது எங்குமே காண முடியாத அரிய பொருளாக மாறிப்போனது.

அதன் பின் சமிபத்தில்பேட்டரிகளால் இயங்கும் முன்று சக்கர வானகனங்கள் வாங்கப்பட்டது.அந்த வாகனங்களுக்கும் அதோ கதி தான். குப்பை பெயரில் துடப்பம் வாங்குவது முதல் அனைத்து பணிகளிலும் காசு மட்டும் பார்ப்பதையே கடமையாக கொண்டுள்ளனர் என்ற குற்றசாட்டு இருந்து வருகிறது. அந்த ஆட்சி, இந்த ஆட்சி என எந்த ஆட்சி வந்தாலும் உள்ளாட்சித்துறை ஊழல் ஒழிந்த பாடில்லை.

பெரிய பெரிய இரும்பு கலன்களில் உள்ள குப்பைகளை தூக்கி லாரிகளில் கொட்ட சிரமப்பட்டு வந்த துப்புரவு தொழிலாளர்களுக்கு முன்று சக்கர வாகனங்கள் வரப்பிரசாதம்தான். என்றாலும், அந்த வாகனங்களை கொள் முதல் செய்ததில் ஆரம்பித்து. துப்புரவு தொழிலாளர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாது வரை மொத்த பணியிலும் மாபெரும் ஊழலை ஓசையின்றி அரங்கேற்றி வருக்கிறது மாநகராட்சிகள்.

திருப்பூர் மாநகராட்சியில் மொத்தம் 60 வார்டுகள் அடங்கி இருக்கின்றன. தினமும் காலையில் தெருக்கள் தோறும் இந்த வாகனங்களில் செல்லும் துப்புரவு தொழிலாளர்கள், வீடுகளில் சேர்ந்திருக்கும் குப்பைகளை வாங்கி சேகரிக்கவே தினமும் பணம் பெற்றுக்கொள்ளாமல் குப்பைகளை பெறுவதில்லை. த்துக் கொள்வார்கள். குப்பை சேகரிப்பாக்காக மக்கள் வரிப்பணத்தில் மாதம் ஒன்றுக்கு கோடிகளை செலவு செய்யும் மாநகராட்சிகள் தனியாரிடம் ஒப்படைத்த சுகாதர பணிக்கு மக்களிடம் கட்டாய வசூல் செய்யும் போக்கை ஏன் கண்டு கொள்வதில்லை.

இதிலும் கனிசசமான பங்கை பெற்றுக்கொண்டு பெட்டி பாம்பாய் அடங்கி கிடக்கிறார்களோ என்ற சந்தேகம் வலுக்குகிறது.

தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் இப்பணி லஞ்ச ஊழலால் தூய்மையற்ற இந்தியா என்று குறைகூறும் அளவில் தான் இருந்து வருகிறது.

மாநகராட்சிகளில் நடைபெற்று வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பற்றியும் தனியாருக்கு தாரை வார்க்கும் தொகை பற்றியும் இத்திட்டத்தின் மூலம் , கொள்முதல் செய்யப்பட்ட ,செய்யப்படும் பொருள்கள் மற்றும் வாகனங்களின் கொள்முதல் விலை, சப்ளை செய்த நிறுவனம் உள்ளிட்ட வினாக்களை ஆர்.டி.ஐ சட்டத்தின் மூலம் கேள்வி கேட்டு பதிலை பெற்றுப்பாருங்கள்.நாம் சொன்ன செய்திகள் எல்லாம் கொஞ்சம் தான் என்பது புரியும்.

திருப்பூர் மாநகராட்சி சில மாதங்களுக்கு முன் பேட்டரி வாகனங்கள் கொள்முதல் செய்தது.

மாநகராட்சி ஆணையரும் மாநகர மேயரும் போட்டோவுக்கு போஸ் கொடுத்து இயக்கி வைத்தனர். அந்த வாகனங்கள் எங்கு பயன் படுகிறது என்பதே தெரியவில்லை. நாமும் பல வார்டுகளில் தேடி பார்த்தோம். நம் கண்களில் தேன்படவே இல்லை.

ஒரு வேலை செய்தியாளர்கள் கண்களுக்கு புலப்படாத மந்திர வாகனமோ என்னவோ என்று புரியவில்லை.இது வரை வாங்கிய குப்பொ சேகரிக்கும் மூன்று சக்கிர வாகனங்கள் அனைத்தும் உத்தரவாதம் காலம் எவ்வளவு என்பது தெரியவில்லை.

அந்த வாகனம் விரைவில் குப்பைக்குப் போய்விடும் தரத்தில் தான் வாங்க படுகிறதோ என்னவோ.? இப்படி தரமற்ற வண்டிகளை வாங்கிய தன் மூலம் ஆளுங்கட்சி பிரமுகர்களும், மாநகராட்சி அதிகாரிகளும் கூட்டுக்கொள்ளை அடித்துள்ளனரோ என்ற கேள்வி எழுக்கிறது.

மாநகரட்சிகளில் குப்பை அள்ளும் பணியில் குப்பைகளை சுத்தமாக அள்ளுகிறார்களோ இல்லையே குப்பை பெயரில் பணத்தை மட்டும் மொத்தமா அள்ளுகிறார்கள் என்பது கைப்புண் போல் தெளிவாக தெரிகிறது. இந்தக்கொள்ளை பற்றிய பல ஆதார புள்ளி விபரங்களோடு விரைவில் உண்மைகளை அம்பலத்தும் முயற்சியை கூட்டில் முயற்சி மாத இதழ் செய்யும்.!

# தனியார் நிதிநிறுவன ஊழியர் அராஜகம்

# பெண் தற்கொலை முயற்சி

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் அருகே தீராம்பாளையம் கிராமத்தை சேர்ந்த சிவக்குமார்(45) இவர் வாட்ஸ் மேன் வேலை செய்கிறார். இவரது மனைவி விசாலாட்சி(40) சித்தாள் வேலை செய்து வருகிறார். இவர்களுக்கு பெண் குழந்தை மற்றும் ஆண் குழந்தை உள்ளது.

இந்நிலையில் குடும்ப வறுமை காரணமாக விசாலாட்சி கடந்த 2022 ஆண்டில் மண்ணச்சநல்லூர் எதுமலை சாலையில் உள்ள ஒரு தனியார் மகளிர் சுய உதவி குழுவில் 40 ஆயிரம் கடன் வாங்கியுள்ளார். இதில் மாதம் 2 ஆயிரத்தி 200 முறை வீதம் மாத தவணை கட்டி வந்த நிலையில் தற்போது மீதி 4 தவணை இருக்கும் பட்சத்தில் இந்த மாத தவணையை அந்த நிதி நிர்வன ஊழியர் சுரேந்தர் என்பவர் தீராம் பாளையத்தில் உள்ள விசாலாட்சி வீட்டிற்கு சென்று பணத்தை கேட்டுள்ளார். அப்போது விசாலாட்சி தனது கணவர் மற்றும் குழந்தைகளுக்கு உடல் சூழ்நிலை சரி இல்லை என்பதால் பணம் நெருக்கடியாக உள்ளது இதனால் பணத்தை அடுத்த வாரம் தருகிறேன் என்று கூறியுள்ளார்.

அவர் கூறியதை ஏற்க மறுத்த நிதி நிறுவன ஊழியர் சுரேந்தர் விசாலாட்சியிடம் தரை குறைவாகவும் பேசி தகாத வார்த்தைகள் திட்டியுள்ளார். இதையடுத்து விசாலாட்சி சுரேந்திரிடம் மரியாதையாக பேசவும் நான் உங்களுக்கு தாய் மாதிரி என்று கூறியுள்ளார். அதையும் பொருட்படுத்தாத



**விசாலாட்சி சுமார் 5 சுய உதவி குழுக்களில் கடன் வாங்கியது அதை மாதம் மாதம் தவறாமல் கட்டி வருவதாகவும் கூறப்படுகிறது. இதில் இந்த மாதம் என்ன நெருக்கடி நிலை என்று தெரியவில்லை ஒரு வாரம் கால அவகாசம் கேட்டுள்ளார். ஆனால் அந்த நிதி நிறுவன ஊழியர் கேட்காமல் விசாலாட்சியை வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு நீ சாவு என்று கூறி சென்றுவிட்டார்**

சுரேந்தர் நீ இறந்து விடு இறந்துவிட்டால் இன்ஷூரன்ஸ் பணம் வரும் அதை நாங்கள் கிளைம் செய்து கொள்கிறோம் என கூறி விசாலாட்சி வீட்டுக்குள் வைத்து வீட்டின் கதவை பூட்டி விட்டு சென்றுள்ளார் இதை கண்ட அக்கம் பக்கத்தினர் அதிர்ச்சி அடைந்து விசாலாட்சியின் வீட்டின் பூட்டை உடைத்து மீட்டனர்.

மேலும் இச்சம்பவத்தில் மன உளைச்சலில் இருந்த விசாலாட்சி கணவர், குழந்தைகள் இல்லாத சமயத்தில் வீட்டில் அரளி விதையை அரைத்து குடித்து மயக்க நிலையில் கிடந்துள்ளார்.

பின்னர் வேலை முடித்து வீட்டிற்கு வந்த கணவர் சிவகுமார் விசாலாட்சி மயங்கி இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு விசாலாட்சியிக்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்நிலையில் இச்சம்பவத்தை குறித்து சிவக்குமார் உறவினர்கள் மண்ணச்சநல்லூர் காவல்நிலையத்திற்கு தகவல் அளித்தார்.

தகவல் அறிந்த மண்ணச்சநல்லூர் சப் இன்ஸ்பெக்டர் முருகையன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர்

போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் விசாலாட்சி சுமார் 5 சுய உதவி குழுக்களில் கடன் வாங்கியது அதை மாதம் மாதம் தவறாமல் கட்டி வருவதாகவும் கூறப்படுகிறது. இதில் இந்த மாதம் என்ன நெருக்கடி நிலை என்று தெரியவில்லை ஒரு வாரம் கால அவகாசம் கேட்டுள்ளார். ஆனால் அந்த நிதி நிறுவன ஊழியர் கேட்காமல் விசாலாட்சியை வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு நீ சாவு என்று கூறி சென்றுவிட்டார் இதனால் மன உளைச்சலில் விசாலாட்சி அரளி விதை குடித்துவிட்டார் என அக்கம்பக்கத்தினர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மண்ணச்சநல்லூர் போலீசார் அந்த நிதி நிறுழனம் மற்றும் நிதி நிறுவன ஊழியர் சுரேந்தர் மீது வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் விசாலாட்சி விஷம் அருந்தியதை அறிந்த சுரேந்தர் தற்போது தலைமறைவாக உள்ளார். மண்ணச்சநல்லூர் போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

மண்ணச்சநல்லூர் பகுதியில் நிதி நிறுவனத்தின் அராஜகம் அதிகரித்து வருகிறது கடந்த பிப்ரவரி மாதம் திருவெள்ளறையில் டீ மாஸ்டர் மனைவி, ஜூலை மாதம் கிழக்கு காமராஜர் நகரை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், மகன், மகள் மூவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம், சென்ற மாதம் நொச்சியத்தில் ஒரு பெண் என மகளிர் சுய உதவி குழு ஊழியர்கள் கொடுக்கும் நெருக்கடி தற்கொலை செய்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது தீராம்பாளையம் கிராமத்தில் விசாலாட்சி தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார். இதனால் மண்ணச்சநல்லூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மூடப்பட்ட சர்க்கரை ஆலையை உடனடியாக திறக்க முதல்வர் ஸ்டாலினுக்கு ஆர்.பி.உதயகுமார் கோரிக்கை!

செயல்பட்டு வந்த சர்க்கரை ஆலையை திறக்கச் சொல்லி போராடி வரும் கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாத நிலையில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை திறக்க வலியுறுத்தி முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் தலைமையில் சர்க்கரை ஆலை முன்பு விவசாயிகள் கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்கள் சந்தித்த ஆர்பி உதயகுமார் தென் மாவட்டங்களுக்கு ஆபத்து பாந்தவனாக இருந்த அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை 2017 .18 ஆம் ஆண்டு மூடப்பட்டது தற்போது முறை மூடப்பட்டுள்ளது தமிழகத்தில் உள்ள கூட்டுறவு ஆலைகளிலேயே மிகப்பெரிய ஆலை இது. கடந்த காலங்களில் ஆண்டுக்கு 2000 ஏக்கர் கரும்பு ஆலையில் பதிவு செய்யப்பட்டு அறுவடை செய்த போது 70 ஆயிரம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது அதேபோல் பதிவு செய்யப்படாத 1.5 லட்சம் டன் கரும்பு கிடைத்தது அதுபோக பிற ஆலையிலிருந்து அரவைக்கு தயாராக கரும்புகள் கிடைக்கக்கூடிய நிலையில் இருந்தது. இந்த சூழ்நிலையில் ஆலையை மூடியது அரசின் கையால் ஆகாத தனமாக பார்க்கப்படுகிறது தொடர்ந்து இந்த சர்க்கரை ஆலை செயல் படுவதற்கு அரசு உதவி செய்ய வேண்டும் இது போன்ற ஆலைகளை அரசு லாபம் மட்டும் பார்க்காமல் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பார்க்க வேண்டும் இது போன்ற ஆலையை மீண்டும் உருவாக்குவது சாதாரணமான விஷயம் இல்லை தென் மாவட்டங்களில் சர்க்கரை ஆலை இல்லாத காலத்தில் 1961ஆம் ஆண்டுக்கு முன்பு தொடங்கப்பட்ட அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை ஆனது. ராஜேஸ்வரி சர்க்கரை ஆலை போன்ற தனியார் ஆலைகளுக்கு கரும்பு பிரித்து கொடுத்த காரணத்தால் அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வரத்து குறைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். 2011 ஆம் ஆண்டில் அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைகள் மின்சார உற்பத்தி தொடங்கப்பட்டது 85% அதன் பணிகள் நிறைவு பெற்று அதன் பிறகு நடைபெற்ற ஆட்சி மாற்றத்தால் அந்த பணிகள் தடைபட்டுள்ளது அதற்கு அரசுஎந்த விளக்கமும் தரவில்லை

ஆகையால் தமிழக அரசு இந்த ஆலையை உடனடியாக திறக்க வேண்டும்



என விவசாயிகளும் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் கோரிக்கை வைத்துள்ளனர் ஏற்கனவே இதே இடத்தில் ஆலையை திறக்க வலியுறுத்தி போராட்டத்தை நடத்தினார்கள் ஏற்கனவே நடந்த போராட்டத்திற்கு எடப்பாடி ஆதரவு தெரிவித்தார் இந்த மாவட்டத்தில் இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள் ஆனால் ஆலையை திறப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை எடப்பாடி முதலமைச்சராக இருந்தபோது கொரோனா காலத்தில் கூட ஆலையை இயக்குவதற்கு உரிய நடவடிக்கை நாங்கள் எடுத்திருந்தோம் அப்போது ஆலையை இயக்குவதற்கு நாங்கள் 23 கோடி ரூபாய் ஆலையை பராமரிப்பதற்கு ஒதுக்கி இருந்தோம் தற்போது இந்த ஆலையை திறப்பதற்கு எடப்பாடி பழனிசாமி அவர்கள் சட்டமன்றத்தில் தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை மனு அளித்து வந்திருந்தார் ஆனால் திறப்பதற்கான எந்த வழியும் காணவில்லை

ஐம்பதாயிரம் விவசாயிகளுடைய வாழ்வாதாரம் கரும்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாய தொழிலாளர்கள் மில் தொழிலாளர்கள் என பலருடைய வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை மீண்டும் தொடங்க வேண்டும் 11 கோடி ரூபாய் இருந்தால் கூட ஆலையை தொடர்ந்து இயக்க முடியும் ஆனால் அரசு அமைத்த குழுவில் 27 கோடி ரூபாய் தேவைப்படுவதாக கூறியிருக்கிறார்கள் ஆனால் இன்றைய முதலமைச்சர் தொழில் முதலீட்டுகளை ஈர்ப்பதற்கு அமெரிக்கா சென்று உள்ளார் ஆனால் இங்கு தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள ஆலையை திறப்பதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வெறும் 27 கோடி ரூபாய் கொடுத்தால் மூடப்பட்டுள்ள ஆலையை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் இதை விடுத்து அமெரிக்காவிற்கு சென்று தொழில் முதலீடுகளை ஈர்க்கப் போகிறேன் என்று கூறுவது வேடிக்கையாக உள்ளது. முதல்வர் ஸ்டாலின் எதிர்க்கட்சியாக இருக்கும் போது கொடுத்த தேர்தல் வாக்குறுதியில் சர்க்கரை ஆலை சீரமைக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் வாக்குறுதி கொடுத்தார் பல மாதங்களுக்கு முன்பு இதேஇடத்தில் தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தினார்கள் மேலும் ஆளை உற்பத்திக்கு புதிதாக இதுவரை யாரையும் பணியமத்தப்படவில்லை ஏற்கனவே பணியில் உள்ளவர்களுக்கும் முறையாக பண பலன்கள் கொடுப்பதில்லை கடந்த காலங்களில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒரு லட்சம் டன் கரும்பு அறுவை செய்து 2017 .18 இல் 30 ஆயிரம் டன் வரை கரும்பு அரவை செய்யப்பட்டு 2100 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டது 95 ஆயிரம் குவின்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது தற்போது இவை அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளது

இந்தப் பிரச்சினையை உடனடியாகபொதுச் செயலாளர் எடப்பாடி கவனத்திற்கு கொண்டு சென்று அவர் அனுமதி பெற்று இங்குள்ள நிர்வாகிகளை கலந்து ஆலோசனை செய்து சர்க்கரை ஆலையை திறக்க மிகப்பெரிய போராட்டம் நடத்துவோம் அமெரிக்கா சென்ற முதல்வர் 900 கோடி முதலீடுகளை ஈட்டி இருப்பதாக அனைத்து பத்திரிகைகளிலும் தலைப்பு செய்தி ஆக வந்துள்ளது இதில் முக்கிய விஷயம் என்னவென்றால் ஜெகத்ரட்சகன் எம்பி அமலாக்க துறைக்கு செலுத்த வேண்டிய நிலைவை தொகை 908 கோடி என்று கூறியுள்ளது விசித்திரமாக உள்ளது தமிழகத்தினுடைய வருவாய் கவலைக்குரியதாக உள்ளது திமுக உடைய வருவாய்தான் உயர்ந்துள்ளது இந்த ஆலையை திறப்பதற்கு மூன்று ஆண்டுகளாக போராடிக் கொண்டிருக்கிறோம்

# போலீஸ் ஸ்டேசனுக்குள் நுழைய மக்கள் பயப்படுவது ஏன்?

## சென்னை உயர் நீதிமன்றம் சரமாரி கேள்வி

நீதிமன்றங்கள் அல்லது மருத்துவமனைகளுக்குச் செல்வதில் தயக்கம் காட்டாத மக்கள் காவல் நிலையங்களுக்குள் செல்ல ஏன் பயப்படுகிறார்கள் என்று மாநில அரசின் தலைமை வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னாவிடம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.எம். சுப்ரமணியம் இன்று கேள்வி எழுப்பினார். காவல் துறையினர் முறையாக நடந்து கொள்ளவும், புகார் கொடுப்பவர்களை மரியாதையுடன் நடத்தவும் வேண்டும் என்றார்.

குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படும் உத்தரவுகளை ரத்து செய்யக்கோரும் மனுக்களை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம், வி.சிவஞானம் அமர்வில் விசாரணைக்கு வந்தது. இந்நிலையில், குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கலாமா? என கேள்வி எழுப்பிய நீதிபதிகள் இது குறித்து அரசு குற்றவியல் தலைமை வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா பதிலளிக்குமாறு அறிவுறித்தியிருந்தனர்.

இதனையடுத்து, ஆஜராகி பதிலளித்த அசன் முகமது ஜின்னா, இடைக்கால ஜாமின் வழங்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதாகவும் ஆனால் ஒவ்வொரு வழக்கக்கும் இது மாறுபடும் எனவும் கூறினார். அப்போது, குறுக்கிட்ட நீதிபதிகள், தேவையில்லாமல் குண்டர் சட்டம் பயன்படுத்தப்படுவதாகவும், தேவையில்லாமல் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படும் நபருக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடலாமா? என கேள்வி எழுப்பினர்.



இதற்கு பதிலளித்த அசன் முகமது ஜின்னா, அவ்வாறு எதுவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டமென கோரிக்கை விடுத்தார். மேலும், தேவையில்லாமல் குண்டர் சட்டத்தை பயன்படுத்தக்கூடாது என டிஜிபிக்கு தான் கடிதம் எழுதியதாகவும் தற்போது குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் கூறினார்.

இதனையடுத்து, குண்டர் சட்டத்தில் அடைப்பதற்கு பதிலாக மாற்று வழிகள் குறித்து ஆராய வேண்டுமென தலைமை குற்றவியல் வழக்கறிஞருக்கு நீதிபதிகள் அறுவுறுத்தினர். மேலும், பொது மக்கள் அச்சமின்றி காவல் நிலையத்தை அணுகும் சூழலை உருவாக்க வேண்டுமெனவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் கருத்து தெரிவித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி

**மக்கள் காவல் நிலையங்களுக்குள் செல்ல ஏன் பயப்படுகிறார்கள். காவல் துறைக்கு தன்னை மக்களின் நண்பன் என்று அழைப்பதை காட்டிலும் அங்கு மிகப் பெரிய சீர்திருத்தங்கள் தேவையாகும். காவல் துறையினர் முறையாக நடந்து கொள்ள வேண்டும், புகார் கொடுப்பவர்களை மரியாதையுடன் நடத்தவும் வேண்டும்**

எஸ்.எம். சுப்ரமணியம், நீதிமன்றங்கள் அல்லது மருத்துவமனைகளுக்குச் செல்வதில் தயக்கம் காட்டாத மக்கள் காவல் நிலையங்களுக்குள் செல்ல ஏன் பயப்படுகிறார்கள். காவல் துறைக்கு தன்னை மக்களின் நண்பன் என்று அழைப்பதை காட்டிலும் அங்கு மிகப் பெரிய சீர்திருத்தங்கள் தேவையாகும். காவல் துறையினர் முறையாக நடந்து கொள்ள வேண்டும், புகார் கொடுப்பவர்களை மரியாதையுடன் நடத்தவும் வேண்டும் என்றார்.

பொதுமக்கள் போலீஸ் ஸ்டேசனுக்குள் செல்ல எந்தத் தயக்கமும் இல்லாத நாளில்தான் காவல் துறையில் உண்மையான சீர்திருத்தங்கள் ஏற்படும். மூத்த காவல்துறை அதிகாரிகள் கூட தங்கள் கார்களில் ஒட்டப்பட்டுள்ள கருப்பு சன்கிளாஸ் ஸ்கீரின்களை அகற்ற வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவுக்கு இதுநாள் வரை கீழ்ப்படியவில்லை.

எந்தவொரு விசாரணையும் அல்லது தண்டனையும் இல்லாமல் தனிநபர்களை ஆறு முதல் ஏழு மாதங்கள் வரை சிறையில் வைத்திருக்க எளிதான வழியாக தடுப்புக் காவல் சட்டங்கள் பல வழக்குகளில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு நபர் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டால், பொது ஒழுங்கை மீறும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக நம்பக்கூடிய சந்தர்ப்பங்களில் மட்டுமே தடுப்புக்காவல் சட்டத்தை மிக குறைவாகவே பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் மாறாக, காவல்துறை எல்லா சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்துகிறது.

கிரிக்கெட் போட்டியில் விளையாடும் போது ஏற்பட்ட தகராறு காரணமாக ஒரு நபர் மற்றொரு நபரை கொலை செய்த வழக்கை சில மணி நேரங்களுக்கு முன்பு எங்கள் பெஞ்ச் விசாரித்தது. அவர் மீது வேறு எந்த வழக்கும் இல்லை. எனினும் போலீசார் அவரை 'குண்டர்' என்று முத்திரை குத்தி தடுப்புக் காவல் சட்டத்தைப் பயன்படுத்தி உள்ளார். அத இது ஒரு நொடியில் நடந்த குற்றம். அவர் கில் ஜாமீன் பெற்றாலும், குண்டர் சட்டத்தைப் பிரயோகித்து, அந்த நபரின் தனிப்பட்ட சுதந்திரத்தைக் கெடுப்பது எவ்வளவு நியாயம். தடுப்புக் காவலில் வைப்பது மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். ஒரு கிரிமினல் வழக்கில் சிக்கினாலும் குண்டர் என்று முத்திரை குத்துவது களங்கத்தை ஏற்படுத்தும். மேலும், குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஒரு நபர்,தனது வாழ்வாதாரத்தை சம்பாதிக்கும் வாய்ப்பை இழக்கிறார். அதன் விளைவாக, அவரது வருமானத்தை நம்பியிருக்கும் குடும்பமும் நலிவடைந்துள்ளது.

ஒரு தனிநபரின் தனிப்பட்ட சுதந்திரத்தை முரட்டுத்தனமான முறையில் குறைக்க முடியாது . அதற்கு பதிலாக, காவல் துறை அதன் கண்காணிப்பு அமைப்பை பலப்படுத்தலாம் . அதேபோல் பிரச்சனை செய்வார்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களைக் கண்காணிக்கலாம்" என்று நீதிபதி எஸ்.எம். சுப்ரமணியம் கருத்து தெரிவித்தார்

# 60 ஆண்டு காலமாக சாலை வசதி கேட்டு மலைவாழ் மக்கள் போராடும் அவலம்





## அரசு உதவி புரியுமா

போடி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பிச்சாங்கரை புலம் வன கிராமத்தில் மாரடைப்பால் ஏற்பட்ட நெஞ்சுவலியின் காரணமாக அக்கம் பக்கத்தினர் சாலை வசதி இன்றி பேடி கட்டி கொண்டு வரும்போது வழியிலேயே இப்பகுதியைச் சேர்ந்த மூக்கையா நாயக்கர் மகன் வீராசாமி 56 வாகன வசதியின்றி வரும் வழியிலேயே உயிர் பிரிந்தன

கடந்த 60 ஆண்டுகளாக சாலை வசதி கேட்டு போராடிய மக்களுக்கு 2006 2007 காலகட்டத்தில் தனி நபர் முயற்சியால் இருவரும் உள்ள பட்டா லேண்ட் விவசாயிகள் தங்களுடைய நிலங்களை வருவாய்த்துறையினருக்கு கொடுத்த நிலையில்

நிலங்களை கையாளப்படுத்திய வருவாய்த்துறை நெடுஞ்சாலை மூலமாக 6.08 கிலோ மீட்டர் தொலைவிற்கு நெடுஞ் சாலை அமைக்குமாறு உத்தரவிட்டனர்

ஆனால் 3.05 கிலோமீட்டர் அளவிற்கு மட்டுமே சாலை வசதி அமைக்கப்பட்டு மீதமுள்ள 1.8 கிலோ மீட்டர் வனத்துறை கட்டுப்பாட்டியுள்ளதால் வனத்துறையினர் சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து கடந்த 15 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஒரு புறம் வனவிலங்கு அச்சுரத்தில் தங்கள் நடை பயணத்தை தோட்ட பகுதிக்கு சென்று வந்தாலும் இதுவரை எந்த அரசுமே நடவடிக்கை எடுக்கலை என இப்போது மக்கள் குற்ற சாட்டி வருகின்றனர்

தமிழக முதல்வர் உடனடியாக வனத்துறையினரிடம் பேச்சுவார்த்தை நடத்தி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி உள்ள மலை கிராமங்களுக்கு சாலை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# சனாதனம் பற்றிய சனாதனிகள்

சனாதனம் பற்றிய சனாதனிகள்'என்ற தமது சிறிய நூலில் தோழர் அருணன் மோடி அரசு கொண்டு வந்திருக்கிற 'விசுவகர்மா' திட்டம் மற்றும் அதன் மோசடி பற்றித் தோல்உரித்துக் காட்டுகிறார். இந்தத் திட்டத்தின்கீழ் 18 வகை தொழில் செய்வதற்குச் சகாய வட்டியிலான கடன் உள்ளிட்ட சில சலுகைகளை மோடி அறிவித்துள்ளார். அத்தகைய தொழில்கள் செய்வோர்கள் யாவர்? தச்சர், படகு தயாரிப்பவர், ஆயுதங்கள் வடிப்பவர், கொல்லர், சுத்தியல் தயாரிப்பாளர், பூட்டு தயாரிப்பவர், சிற்பி, பொற்கொல்லர், குயவர், செருப்பு தைப்பவர், கொத்தனார், கூடை பின்னுவோர், பொம்மை செய்வோர், முடி திருத்துவோர், மாலை கட்டுவோர், வண்ணான், தையல்காரர், வலைபின்னுவோர் இப்படி நீள்கிறது பட்டியல்.

கைவினைஞர்களுக்குக் கடன் உதவி என்றால் நல்லது தானே என்று அனைவரும் கருதுவர். ஆனால் உள்ளே புகுந்து பார்த்தால் தான் அது வெறும் கடன் திட்டமல்ல, பெரும் சதித்திட்டம் என்பதை உணர முடியும். பயனாளிக்கு 18 வயது நிரம்பினால் போதும் கடன் தருவார்கள். அந்த வயசில் தான் ஒருவர் கல்லூரிக்குக் போக ஆசைப்படுவார். கல்லூரிக்குப் போவதை விட்டுவிட்டு சுயதொழில் செய்ய வேண்டும் என்பது தான் இந்தச் சதித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள். பயனாளி சுய வேலைவாய்ப்பாக பாரம்பரிய தொழில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை கிராம பஞ்சாயத்து தலைவர் அல்லது நகர்ப்புற அமைப்பு அதிகாரி உறுதி செய்ய வேண்டும் என்பது நிபந்தனை. 18 வயதில் இளைஞர்கள் கல்லூரிக்குப் போக விடாமல் தடுத்து அவரவர் குலத் தொழில் செய்வது அவசியம் என்ற நடைமுறையை அமல்படுத்தவே இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறது.

இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவது ஒன்றிய அரசின் சிறு, குறு, நடுத்தரத் தொழில் அமைச்சரகம். இவற்றைக்குறுந்




தொழில்களாகக் கருதி அவற்றில் ஈடு படுகிற எவராயினும் அவருக்குக்கடன் உதவி தந்தால் நமக்கு ஆட்சேபணை இல்லை என்கிறார் அருணன். ஆனால் மத்திய அரசோ அவரவர் பாரம்பரியத் தொழிலாக, குடும்பத் தொழிலாக, குலத் தொழிலாக இருக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்வதை பார்க்கும் போது தான் இந்தத்சதி திட்டத்தின் பின்னணியில் உள்ள உள் நோக்கம் வெளிப்படுகிறது.

அடித்தட்டு இந்துக்கள் வேறு நவீன தொழில் களுக்குஉயர் பதவி களுக்குவந்துவிடக் கூடாது எனும் கெட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது தான் இந்த குலத்தொழில் திட்டம். உயர் சாதியினர் எனப்பட்டோர் தன் குலத்தொழிலை விட்டு அதிக வருமானம் தரும் நவீன தொழில்களுக்கும் உயர்பதவிகளுக்கும் ஓடுகிறார்கள்; அதற்கான படிப்பைப் படிக்கிறார்கள். ஆனால் மத்திய அரசோ, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு அடித்தட்டு மக்களுக்கு குலத்தொழில் செய்ய வேண்டும் என்று அறிவுரை சொல்கிறது. ராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்திற்கும் தற்போது மத்திய அரசு கொண்டுவரும் இந்தத் திட்டத்திற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்கிறார் உதயநிதி

இவர் கூறுவது நியாயமாகத் தான் படுகிறது.


# இந்திரா காந்திக்கு எதிராக நின்ற ஆளுமை!

## இந்திய அரசியல் களத்தில் சீதாராம் யெச்சூரி யார்?

கடந்த மாதம் 19-ம் தேதி முதல் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் நுரையீரல் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வந்த சிபிஐ (எம்) பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி (72), சிகிச்சை பலனின்றி நேற்று (செப்.12) காலமானார். இந்திய அரசியலின் மிக முக்கிய ஆளுமைகளில் ஒருவராக திகழ்ந்த இவர், பிறந்த இடம் சென்னை. 1952-ம் ஆண்டு ஆகஸ்ட் 12-ம் தேதி சென்னையில் தெலுங்கு பேசும் குடும்பத்தில் பிறந்த இவருடைய இயற்பெயர் யெச்சூரி சீதாராம ராவ். ஆந்திரப் பிரதேசத்தின் காகிநாடாவை பூர்விகமாகக் கொண்ட வைதீக பிராமண குடும்பம் இவருடையது.

இவரது தந்தை சர்வேஸ்வர சோமயாஜுலு யெச்சூரி, ஆந்திரப் பிரதேச மாநில சாலைப் போக்குவரத்துக் கழக பொறியாளராக பணியாற்றியவர். இவரது தாய் கல்பகமும் அரசு ஊழியர். விஜயவாடாவிலும், ஹைதராபாத்திலும் பள்ளிப் படிப்பை படித்தவர். 1967-68-ல் தெலங்கானா போராட்டம் தீவிரமடைந்தை அடுத்து, இவரது குடும்பம் டெல்லிக்கு இடம் பெயர்ந்தது.

டெல்லி செயின்ட் ஸ்டீபன் கல்லூரியில் பிஏ பொருளாதாரம் படித்த யெச்சூரி, டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் எம்ஏ பொருளாதாரம் படித்தார். ஜேஎன்யு-வில் படிக்கும்போதுதான் அவரது அரசியல் வாழ்க்கை தொடங்கியது. தலைமைப் பண்பு காரணமாக, யெச்சூரி மாணவர்



சங்க தலைவராக தேர்வானார். அப்போது, அவசரநிலையை பிறப்பித்த பிரதமர் இந்திரா காந்திக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டத்துக்கு அவர் தலைமை தாங்கினார்.

பிரதமர் பதவியை இந்திரா காந்தி ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோஷங்களை எழுப்பிய மாணவர்கள், அப்போதைய துணைவேந்தர் பி.டி.நாக் சவுத்ரியை வளாகத்துக்குள் நுழைய எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, அரசு பல்கலைக்கழகத்தை மூட உத்தரவு பிறப்பித்தது. ஆனால், மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து பல்கலைக்கழகம் வழக்கம் போல் செயல்படுவதை உறுதி செய்தனர். அனைத்து வகுப்புகளும் நடத்தப்பட்டன. சுமார் நாற்பது நாட்கள் இவ்வாறு பல்கலைக்கழகம் நடந்தது.

ஜேஎன்யு வேந்தராக பதவியில் தொடர எதிர்ப்பு தெரிவித்து இந்திரா காந்திக்கு எதிராக ஜேஎன்யு மாணவர்கள் பேரணி நடத்தியபோது, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் 5 பேரை மட்டும் சந்திக்க அனுமதி அளித்தார் இந்திரா காந்தி.

இந்தச் சம்பவம் குறித்து ஒருமுறை 'தி இந்து'–வுக்கு அளித்த பேட்டியில் நினைவு கூர்ந்த யெச்சூரி, "நாங்கள் 500 பேர் இருந்தோம். இந்திரா காந்தியைச் சந்திக்க நாங்கள் ஐந்து பேர் மட்டுமே உள்ளே செல்ல முடியும் என்று அவருடைய உதவியாளர் எங்களிடம் கூறினார். ஆனால், நாங்கள் வற்புறுத்தியபோது, இந்திரா காந்தியே வெளியே வந்தார். அவருக்கு எதிரான எங்கள் தீர்மானத்தை நாங்கள் படித்தோம். அதை அவர் கேட்டார். தீர்மானத்தை நான் அவரிடம் கொடுத்தேன். அவரும் அதை நாகரிகமாக பெற்றுக் கொண்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் ராஜினாமா செய்தார்" என்று கூறினார். இந்திரா காந்தியின் முன், மாணவர்கள் புடைசூழ தீர்மானத்தை கையில் பிடித்தபடி யெச்சூரி நிற்கும் புகைப்படம் மிகவும் பிரபலமானது.

சிபிஎம்–ன் முதல் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டவர் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த பி. சுந்தரய்யா. இவரது இயற்பெயர் சுந்தர ராம ரெட்டி. சாதி பெயரை இணைத்துக்கொள்ள விரும்பாத அவர், சுந்தரய்யா ஆனார். சுந்தரய்யாவால் ஈர்க்கப்பட்ட யெச்சூரி சீதாராம ராவ், அவரைப் பின்பற்றி சீதாராம் யெச்சூரி ஆனார். இந்திய மாணவர் கூட்டமைப்பின் (ஷிதிமி) தேசிய தலைவராக 1984–ல் தேர்ந்தெடுக்கப்பட்ட சீதாராம் யெச்சூரி, அதே ஆண்டு சிபிஎம் மத்திய குழுவின் நிரந்தர அழைப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து அடுத்த சில ஆண்டுகளில் மத்திய குழுவின் முழுமையான உறுப்பினரான சீதாராம் யெச்சூரி, 1992–ல் பொலிட் பீரோ உறுப்பினரானார்.



32 வயதில் மத்தியக் குழு உறுப்பினராகவும், 40 வயதில் பொலிட்பீரோ உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட சீதாராம் யெச்சூரி, 2015–ல் கட்சியின் மிக உயர்ந்த பதவியான பொதுச் செயலாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் தொடர்ச்சியாக 3 முறை அவர் பொதுச் செயலாளராக தேர்வானார்.

2005 முதல் 2017 வரை மாநிலங்களவை உறுப்பினராக மேற்கு வங்கத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சீதாராம் யெச்சூரி, மிகச் சிறந்த நாடாளுமன்றவாதியாகவும் விளங்கினார். கூர்மையாகவும் அதேநேரத்தில் நகைச்சுவையாகவும் பேசக் கூடியவர் யெச்சூரி. பல்வேறு கட்சிகளின் தலைவர்களுடன் இலகுவாக பழகக்கூடியவராக விளங்கிய அவர், அதேநேரத்தில் உறுதியான மார்க்சிஸ்ட்டாகவும் திகழ்ந்தார்.

1996–ல் ஐக்கிய முன்னணி அரசு அமைந்தபோது குறைந்தபட்ச பொதுத்திட்டத்தை வகுப்பதில், ப.சிதம்பரம், எஸ்.ஜெய்பால் ரெட்டி உள்ளிட்டோருடன் இணைந்து நெருக்கமாக பணியாற்றினார்

சீதாராம் யெச்சூரி. 2004-ல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்த போதும், குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றினார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இண்டியா கூட்டணியை உருவாக்கியதில் மிக முக்கிய பங்கு வகித்தவர் சீதாராம் யெச்சூரி. கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான மோதல்களைத் தீர்ப்பதற்கும் தனது ஆளுமையைப் பயன்படுத்தியவர் அவர். ஒரு காலத்தில் இந்திரா காந்திக்கு எதிராக நின்ற சீதாராம் யெச்சூரி, அவரது மருமகள் சோனியா காந்தி மற்றும் பேரன் ராகுல் காந்திக்கு நெருக்கமானவராகவும் திகழ்ந்தார்.

பொருளாதார படிப்பில் தங்கப் பதக்கம் வென்ற சீதாராம் யெச்சூரி, வாழ்க்கைப் பாதையில் பல அடையாளங்களைக் கடந்தவர். அவர் ஒரு மார்க்சிஸ்ட், அவர் ஒரு பன்மொழியாளர், மெத்தப் படித்தவர்களுக்கு மட்டுமல்லாது, எளிய மக்களுக்கும் அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் தெளிவாகப் பேசக்கூடியவர். அவரது மறைவால் ஏற்பட்டிருக்கும் இழப்பு, மார்க்சிஸ்டுகளுக்கு மட்டுமானதல்ல, எல்லா மக்களுக்குமே இழப்பு தான்.

# நாட்டின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது

## மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் பெருமிதம்

நாட்டின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் தெரிவித்தார்.

சென்னை துறைமுகம் சார்பில், ‘நாட்டின் வளர்ச்சிக்கு பெண்கள் சக்தியை பயன்படுத்துதல்’ என்றநிகழ்ச்சியும் பாராலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பாராட்டு விழா மற்றும் தூய்மைப்பணி தொடக்க விழாவும் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில், சென்னை மற்றும் காமராஜர் துறைமுகங்களின் தலைவர் சுனில் பாலிவால் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, ‘அனைத்து துறைகளின் வளர்ச்சிக்கு இன்று பெண்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். இதன்மூலம், வரும் 2047-ம்ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறும். இந்திய கலாச்சாரத்தில் பெண்கள் குறிப்பாக, அன்னையர்கள் கொண்டாடப்படுகின்றனர். அனைவரும் தங்களது அன்னையர்களை போற்றும் விதமாக ஒரு மரம் நட வேண்டும்’ என்றார்.

மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித் துறை செயலாளர் டி.கே. ராமச்சந்திரன் பேசும்போது, ‘நாட்டின் முக்கிய துறைகளில் இன்றைக்கு பெண்கள் பங்களித்து வருகின்றனர். குறிப்பாக, கப்பலில் சிப்பந்திகளாக பெண்கள் பணிபுரிகின்றனர். நமது கலாச்சாரம் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது’ என்றார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மத்திய




**சென்னை துறைமுகம் சார்பில் நடைபெற்ற விழாவில், பாராலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற துளசிமதி முருகேசனுக்கு ரூ.2 லட்சமும், வெண்கல பதக்கம் வென்ற மணிஷா ராமதாஸுக்கு ரூ.1 லட்சத்துக்கான காசோலைகளை மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் வழங்கினார்**

துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் பேசியதாவது: சென்னை துறைமுகத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ், தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒருவரது வாழ்க்கை தூய்மையாக இருக்கும்போது, சமூகமும் தூய்மைபெறும். நாட்டை தூய்மையாக வைத்திருக்க அனைவரும் பங்களிக்க வேண்டும். பிரதமர் மோடியின் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் பெண்கள் முன்னேற்றத்துக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

நாட்டின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. சர்வதேச அளவிலும் இந்தியாவின் பெருமையும், வலிமையும் அதிகரித்து வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் 5டிரில்லியன் டாலர் என்ற பொருளாதார வளர்ச்சியை இந்தியா அடையும். இவ்வாறு பேசினார்.

நிகழ்ச்சியில், அண்மையில் பாரீஸ் நகரில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற துளசிமதி முருகேசனுக்கு ரூ.2 லட்சமும், வெண்கல பதக்கம் வென்ற மணிஷா ராமதாஸுக்கு ரூ.1 லட்சமும் ரொக்கப் பரிசாக அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், காமராஜர் துறைமுக மேலாண் இயக்குநர் ஜரீன் சிந்தியா, சென்னை துறைமுக துணைத் தலைவர் எஸ்.விஸ்வநாதன், இந்தியக் கடல்சார் பல்கலைக்கழக துணைவேந்தர் மாலினி வி.சங்கர், நாட்டின் முதல் கடல்சார் பொறியாளர் சோனாலி பானர்ஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மாநில சுயாட்சிக்காக அரசியல் சட்டத்தில் திருத்தம் சட்ட முயற்சிகளை திமுக மேற்கொள்ளும்

## முதல்வர் ஸ்டாலின் உறுதி



**சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் திமுக பவளவிழா, முப்பெரும் விழா நடைபெற்றது. இதில், பெரியார், அண்ணா, கலைஞர், பாவேந்தர், பேராசிரியர், மு.க.ஸ்டாலின் பெயரிலான விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். உடன், அமைச்சர்கள், எம்.பி.க்கள் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள்**

மாநில சுயாட்சிக்காக அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளை திமுக நிச்சயமாக, உறுதியாக மேற்கொள்ளும் என்று சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் நடைபெற்ற திமுக பவளவிழா, முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபட தெரிவித்தார்.

அறிஞர் அண்ணா பிறந்தநாள் (செப்.15), பெரியார் பிறந்தநாள் மற்றும்திமுக தொடங்கப்பட்ட நாள் (செப்.17)ஆகியவற்றை இணைத்து திமுக சார்பில், ஆண்டுதோறும் செப்.17-ம் தேதி முப்பெரும் விழா கொண்டாடப்படுகிறது.

1949-ல் திமுக தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதால், தற்போது பவள விழா கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், திமுக பவளவிழா மற்றும் முப்பெரும் விழா, சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது.

சென்னை தெற்கு மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை 5.46 மணிக்கு வந்தார். தொடர்ந்து, மேடையில் பவள விழா, முப்பெரும் விழா தொடர்பான வீடியோ காட்சி ஒளிபரப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட கருணாநிதியின் உருவம், முதல்வர் ஸ்டாலின் அருகில் அமர்ந்து அவரை வாழ்த்திப் பேசுவது

போன்ற காட்சி திரையிடப்பட்டது.

இதன்பிறகு, மாலை 5.52 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. சுகாதாரத் துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட செயலாளருமான மா.சுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, கலைஞர் அறக்கட்டளை சார்பில், கட்சியில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் அளவில் சிறப்பாக பணியாற்றிய நிர்வாகிகள் மண்டலத்துக்கு 4 பேர் என 16 பேருக்கு தலா ரூ.1 லட்சம் பண முடிப்பு, சான்றிதழை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

தொடர்ந்து, பெரியார் விருதை பாப்பம்மாளுக்கு பதிலாக அவரது பேத்தி ஜெயசுதாவிடம் முதல்வர் வழங்கினார். பின்னர், அண்ணா விருதை அறந்தாங்கிமிசா ராமநாதனுக்கும், கலைஞர் விருதைஜெகத்ரட்சகன் எம்.பி.க்கும், பாவேந்தர் விருதை கவிஞர் தமிழ்தாசனுக்கும், பேராசிரியர் விருதை வி.பி.ராஜனுக்கும், பவளவிழா ஆண்டில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மு.க.ஸ்டாலின் விருதைஎஸ். எஸ்.பழனிமாணிக்கத்துக்கும் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

75 ஆண்டில் எத்தனையோ சாதனை: விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: திமுக கடந்து வந்த 75 ஆண்டுகளில் எத்தனையோ சாதனைகளை செய்துள்ளோம். அதேநேரத்தில், நமது எல்லா கனவுகளும் நிறைவேறிவிட்டதா என்றுகேட்டால் இல்லை. மாநில உரிமைகளை வழங்கும் மத்திய அரசு அமையவில்லை. நிதி உரிமை உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு இன்னமும் போராட வேண்டிஉள்ளது.

ஏராளமான நெருக்கடிகளுக்கு இடையில்தான், தமிழகத்தை எல்லா விதங்களிலும் முன்னேற்றும் ஒற்றை இலக்குடன் திமுக அரசு செயல்பட்டு வருகிறது. அண்ணாவும், கருணாநிதியும் வலியுறுத்திய மாநில சுயாட்சி கொள்கை, நம் உயிர்நாடி கொள்கைகளில் ஒன்று. "நாம் கோட்டையில் இருந்தாலும், அங்கு இருக்கும் புல்லை வெட்டக்கூட உரிமை இல்லை" என்றார் கருணாநிதி.

இன்று க்ரீம் பன்னுக்கு ஏன் இவ்வளவுவரி போடுகிறீர்கள் என்று கேட்கக்கூட உரிமை இல்லாத நிலை உருவாகிஉள்ளது. இந்த சூழலில் மாநில சுயாட்சியை வென்றெடுப்பதற்கான ஓர் அறிவிப்பைத்தான் இந்த பவள விழா செய்தியாக சொல்ல விரும்புகிறேன். குறைவான நிதிவளத்தை கொண்டே, நம்மால் இவ்வளவு சாதனைகளை செய்ய முடிகிறது என்றால், முழுமையான நிதிவளம் கிடைத்தால், தமிழகத்தை அனைத்திலும் சிறந்த மாநிலமாக மாற்றிக்காட்ட நம்மால் முடியும். எனவே, அனைத்து அதிகாரங்களும் கொண்டவையாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளை திமுக நிச்சயமாக, உறுதியாக மேற்கொள்ளும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

விழாவில், திமுக துணை பொதுச்செயலாளர்கள் பொன்முடி, ஐ.பெரியசாமி, ஆ.ராசா, கனிமொழி, அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், கட்சியின் மூத்த நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# ஒரு ரூபாய்க்கு இட்லி விற்கும் பாட்டிக்கு 2 சென்ட் இடம்

## எஸ்.பி.வேலுமணி வழங்கல்



கோவையில் ஒரு ரூபாய்க்கு இட்லி விற்கும் பாட்டி கமலாத்தாளுக்கு அதிமுக கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. வேலு மணி தனது சொந்த செலவில் 2 சென்ட் இடம் வாங்கி கொடுத் துள்ளார்.

கோவை தொண்டாமுத்தூர் தொகுதிக்குட்பட்ட பூலுவப்பட்டி, வடிவேலம்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் கமலாத்தாள் (95). இவர் பல ஆண்டுகளாக ஒரு ரூபாய்க்கு இட்லி விற்பனை செய்து வருகிறார். லாப நோக்கு இல்லாமல் இட்லி வழங்கும் பாட்டியின் சேவையை பலரும் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில், அதிமுக கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி, கமலாத்தாளின் நேர்மையையும், சேவையையும் பாராட்டும் விதமாக அவரது வீட்டின் அருகில் இரண்டு சென்ட் இடம் வாங்கி அவரது பெயருக்கு பத்திரப்பதிவு செய்தார். இதையடுத்து 2 சென்ட் இடத்தின் பத்திரத்தை பாட்டி கமலாத்தாளிடம் எஸ்.பி.வேலுமணி ஒப்படைத்தார்.

**Kootil Muyarchee Tamil Monthly owned Published and Printed by L. Suriyakumar, Printed at Sri Mahendra Graphics, No. 19/1, Poobegam 2nd Lane, Border Thottam, Anna Salai, Chennai - 600 002.**
**and Published from 2/923, 2nd Street, Veerapandi, J.J. Nagar, Tirupur-641605.**
**Editor : L.SURIYAKUMAR Cell : 99941 90815 Email: muyarchimagazine@gmail.com**

# திருப்பூர் மாவட்டத்தில் குட்கா !

# அதிரடி காட்டும் அதிகாரி **விஜயலலிதாம்பிகை**

## கடைகளுக்கு சீல் மற்றும் அபராதம்





திருப்பூர் மாநகர பகுதியில் அரசு தடை விதித்த ஹான்ஸ் மற்றும் புகையிலையை பெட்டிக்கடை என்ற பெயரில் குட்கா பொருட்களை விற்ற கடைகளுக்கு சீல் வைத்து பல லட்ச ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தில் 19 நபர்கள் கொண்ட உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் குழு பேக்கரி மற்றும் குளிர்பான கடைகளில் திடீர் ஆய்வு செய்து காலாவதியான 86, 500 கிலோ மதிப்பிலான உணவுப் பொருட்களை பறிமுதல் செய்து அழித்தனர். திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்புத் துறையில் இப்படியும் ஒரு அதிகாரியா என்ற வியப்பில் பொதுமக்கள்.

திருப்பூர் மாவட்டம் பனியன் நகரமாக அமைந்ததனால் தள்ளு வண்டிகளில் குறைந்த விலைக்கு கோழி இறைச்சி சில்லி விற்பனை செய்வதாகவும் மற்றும் சனி, ஞாயிறு நடைபாதை வியாபாரிகள் என்ற பெயரில் கெட்டுப்போன இறைச்சிகள் விற்கப்படுவதாகவும் அதையும் கொஞ்சம் அதிரடி காட்டினால் சிறப்பாக இருக்கும் என்பது திருப்பூர் வாசிகளின் கோரிக்கையாக உள்ளது.


கூட்டில் விடாமுயற்சி திருவினையாக்கும் முயற்சி
தமிழ் மாத இதழ்

**L. சூரியகுமார்,** ஆசிரியர், வெளியீட்டாளர்
**99941 90815, 94984 33815**

Web : kootilmuyarchee.com
YouTube kootilmuyarchee
கண்டு களியுங்கள்

RNI Reg.No. : TNTAM/2019/82464
KOOTIL MUYARCHEE Tamil Monthly magazine
R.Dis.No. 5414/2019. A.1.
R.Dis. 302/2019

